★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 செப்டெம்பர் 17 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 222 | Tuesday 17, September, 2024 | 12பக்கங்கள் | 50/-

## "வோக்ஸ்வேகன்" தொழிற்சாலை இன்று ஜனாதிபதியால் திறப்பு

உதிரிப்பாகங்களைக் கொண்டு கார் தயாரிக்கும் மிகப் பெரிய தொழிற்சாலையான வோக்ஸ்வேகன் (volkswagen) தொழிற்சாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்று (17) திறந்து வைக்கப்படவுள்ளதாக, 04

### நாட்டை முன்னேற்ற உலக நட்பு நாடுகள் உதவி

# இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையில் விரிவான அபிவிருத்தி



### கந்தளாயில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



விரிவான செய்தி 04ஆம் பக்கம்...

# தனியார் துறையின் சம்பளம் இம்மாதம் முதல் அதிகரிப்பு

**ஆகக் குறைந்த அடிப்படை சம்பளம் ரூபா 21.000 ஆகிறது**

தனியார்துறை முதலாளிமார், இம்மாதம் தமது தொழிலாளரது சம்பளத்தை அதிகரித்து வழங்க வேண்டும் என தொழில் அமைச்சு நேற்று (16) அறிவித்துள்ளது. தனியார்துறை ஊழியர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை சம்பளத்தை 21,000 ரூபாவாக அதிகரிகப்படவுள்ளது. இதனை இம்மாதம் முதல் நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. தனியார் துறை ஊழியர்களின் 04

### நாளை 18 ஆம் திகதி மாபெரும் பேரணி

## ஜனாதிபதி ரணிலின் வெற்றி உறுதி கூட்டம் ஹோமாகமவில்

### சகல பதாகைகளையும் அகற்றுமாறு உத்தரவு

ஹோமாகமவில் நாளை (18) நடைபெறவுள்ள சுயேட்சை ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதி செய்யும் இறுதிப் பேரணியை முன்னிட்டு அப்பகுதியில் வைக்கப்பட்டுள்ள அனைத்து பதாகைகள் மற்றும் கட் அவுட்களையும் அகற்றுமாறு தேர்தல் ஆணையாளர் ஹோமாகம பொலிஸாருக்கும், ஹோமாகம பிரதேச 04



### ஹர்ஷ, கபீர், ஏரான் ஆகியோர் பொருளாதாரத்தில்

## திறமையில்லாத தலைவரை பின்தொடர்வது எதற்காக?

### நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் கேள்வி



ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் பொருளாதாரம் குறித்து அறிவுள்ள ஹர்ஷா, கபீர், எரான் ஆகியோர், பொருளாதாரத்தில் திறமையற்ற அக் கட்சியின் தலைவரை ஏன் பின் தொடர்கின்றார்கள் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் (15) நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் கருத்துரைக்கும்போது இவ்வாறு தெரிவித்த அவர், பொருளாதார ரீதியில் நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ, கபீர் மற்றும் 04

## நாட்டை அழிவிலிருந்து காப்பாற்றியவர் ஜனாதிபதி

### அமைச்சர் அலி சப்ரி



2022ஆம் ஆண்டு, இந்த நாடு பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்து, ஒரு தலைவரைத் தேடிக் கொண்டிருந்த வேளையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை நிபந்தனையின்றிப் பொறுப்பேற்றார். இன்று பங்களாதேஷில் நடப்பதைபோன்று, அவரை மிரட்டி, வீட்டுக்கு தீ வைத்து, நூலகத்தை அழித்து, அரச அதிகாரத்தைக் கைப்பற்ற சிலர் முயற்சித்தனர்.

அன்று அவர் ஒரு அடியேனும் பின்னோக்கி வைத்திருந்தால், இன்று இந்த 04

### அரசாங்க வைத்தியசாலைகளில்

## புற்றுநோய் PET–ஸ்கேன் வசதியை மேம்படுத்த உடன்படிக்கை கைச்சாத்து



சுகாதார அமைச்சு, இலங்கை அணு சக்தி சபை மற்றும் எக்சஸ் இன்டர்நேஷனல் ஆகிய நிறுவனங்களுக்கிடையில் இலங்கையில் சைக்ளோட்ரான் (அணு பிளவடைய செய்வதிலும் செயற்கைக் கதிரியக்க ஆக்கத்திலும் பயன்படுத்தப்படும் மின் காந்த விரைவூக்கக் கருவி) 04

### ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில்

## ஆய்வுகூட பரிசோதனை கட்டணம் 50% குறைப்பு



ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் ஆய்வகத்தினால் நடத்தப்படும் பரிசோதனைகளுக்கான கட்டணங்களை 50 சதவீதத்தால் குறைத்து நோயாளர்களுக்கு நிவாரணம் வழங்க 04

## தேர்தல் விதிமுறை மீறல்கள் நான்காயிரத்தை தாண்டியது

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு



ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாகவும் கடந்த 24 மணி நேரத்தில் மாத்திரம் 04

## அடுத்த வருடம் முதல் சகல பரீட்சைகளும் வழமைக்கு

### உரிய நேரத்தில் நடத்தப்படும் -கல்வியமைச்சர்



அடுத்த வருடம் முதல் அனைத்து பரீட்சைகளும் தாமதமின்றி நடைபெறும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

2025 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி பாடசாலை தவணை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் எவ்வாறாயினும், மூன்றாவது தவணை இரண்டு வாரங்களுக்கு 04

## சிறிதரன் எம்.பியுடன் திலகராஜ் சந்திப்பு

### தேர்தல் விஞ்ஞாபனமும் கையளிப்பு



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி வேட்பாளர் மயில்வாகனம் திலகராஜ், 04




## பங்களாதேஷ் தொழிற்சாலை ஊழியர்களின் ஆர்ப்பாட்டம் செப். இறுதிவரை நீடிக்க வாய்ப்பு

07

## டொனால்ட் ட்ரம்ப் மீது மீண்டும் கொலை முயற்சி

### உளவுத்துறையினரால் முறியடிப்பு



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் குடியரசு கட்சி வேட்பாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான 04

## ரணில் ஆட்சிக்கு வந்திருக்காவிடின் இன்று பெற்றோலின் விலை ரூ. 3000

### இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அன்று நாட்டைப் பொறுப்பேற்றிக்காவிட்டால், இன்று பெற்றோலின் விலை 3,000 ரூபாவையும் தாண்டியிருக்கும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 04

## நாட்டை பிளவுபடுத்த சிலர் பகீரத முயற்சி


### இடமளிக்கமாட்டோம் என்கிறார் மஹிந்த

ஜனாதிபதி தேர்தல் பிரசார மேடைகளில் நாமல் ராஜபக்ஷவை தவிர, எவரும் தேசியம் மற்றும் பௌத்தம் 04



## அநுர ஆட்சிக்கு வந்தால், மீண்டும் வரிசை யுகம்

### ரிஷாட் பதியுதீன் தெரிவிப்பு



அநுர ஆட்சிக்கு வந்தால், ஆறு மாதங்களில் மீண்டும் வரிசை யுகம் ஏற்படுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் மிகவும் முக்கியமானது எனவும், இத் தேர்தலில் சஜித் பிரேமதாசவின் வெற்றி உறுதி எனவும் 04

## தொலைநோக்குடனான திட்டமிடல் என்னிடம்

### ஜனாதிபதி வேட்பாளர் நாமல் தெரிவிப்பு



திட்டமிடல் ஒன்றுடனேயே தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மஹியங்கனை பகுதியில் நேற்று முன்தினம் (15) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து 04

## ஒன்றிணைந்த நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வே தீர்வு

### யாழில் சஜித் உறுதி



ஒன்றிணைந்த நாட்டுக்குள் தமிழர்களுக்கான அதிகார பகிர்வினை குறுகிய காலத்துக்குள் மாகாண சபையினூடாக வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச மீண்டும் உறுதியளித்துள்ளார். யாழ்ப்பாணம் – மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் 04

## தமிழ்பொது வேட்பாளர் என்பது ஒரு மாயமான்

### சஜித் மேடையில் சுமந்திரன் சாடல்

தமிழ்பொது வேட்பாளர் என்கின்ற ஒரு மாயமானுக்கு மயங்காது, அதனைத் தூக்கி வீசி விட்டு, சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டும்.



விரிவான செய்தி 11ஆம் பக்கம்...

# பொருளாதாரப் புரட்சி ஏற்படுத்தவே மக்கள் ஆணையைக் கோருகின்றேன்



## இரத்தினபுரியில் ஜனாதிபதி தெரிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 'மாற்றத்திற்காக' மக்கள் ஆணையைக் கோரவில்லை என்றும், மாறாக நாட்டில் பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்துவதற்காகவே அதனைக் கோருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஏற்றுமதி பொருளாதாரம், விவசாய நவீனமயமாக்கல், டிஜிட்டல், பசுமை மற்றும் அறிவு சார் பொருளாதாரத்தின் ஊடாக பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேவேளை, 'அஸ்வெசும', 'உறுமய' திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் சமூக நீதி ஆணைக்குழுவை உருவாக்குதல் ஊடாக சமூக புரட்சியை ஏற்படுத்தவும் பெண்களை வலுவூட்டுதல் மற்றும் ஊழலுக்கு எதிரான நிகழ்ச்சி நிரலை செயற்படுத்துதல், மாவட்ட அபிவிருத்தி சபைகள் மற்றும் மக்கள் சபைகளை உருவாக்குவதன் மூலம் பெண்கள் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரித்து அரசியல் புரட்சியை அடுத்த 05 ஆண்டுகளில் ஏற்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இரத்தினபுரியில் நேற்றுமுன்தினம் (15) பிற்பகல் நடைபெற்ற 'ரணிலால் இயலும்' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் பேரணியில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதுடன் ஜனாதிபதிக்கு மிகுந்த உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்த மக்கள் நாடு முகங்கொடுத்த நிலைமையினால் வெறுப்படைந்திருப்பர் எனவும், திசைகாட்டிக்கு வாக்களிப்பது அதற்கு பரிகாரமாக அமையாது எனவும் குறிப்பிட்டார்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

"நாடு பிரச்சினையில் இருக்கும் போது ஒன்றிணைந்து செயற்படுவது என்பது ஐக்கிய தேசியக் கட்சி நீண்டகாலமாக பின்பற்றி வந்த பண்பு. அந்தக் கொள்கைகளைப் பின்பற்றியதற்காக என்னை ரணில் ராஜபக்ஷ என்று குற்றம் சாட்டினர். பொதுஜன பெரமுன கட்சியின் பெரும்பான்மையினர் என்னுடன் இருந்தனர். ஜி.எல். பீரிஸ் உள்ளிட்ட சிலர் எதிரணிக்கு சென்றார்கள். அதற்காக நாங்கள் சஜித் பீரிஸ் என்று அவரைக் கூறவில்லை. நாட்டைப் பற்றி சிந்தித்துத்தான் நாம் செயற்பட்டோம்.

பொருளாதாரம் சரிந்த நாட்டை, அந்நிய செலாவணி இல்லாத நாட்டை இரண்டாண்டுகளில் மீட்க முடியாது. எனவே, இந்த ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தி, நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்குத் தேவையான பொருளாதார வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த மக்கள் ஆணை வழங்க வேண்டும் என்று கோருகின்றேன்.

உண்மையான ஐக்கிய தேசியக் கட்சியினர் என்றால் எனக்கு வாக்களிக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு துரோகம் இழைப்பதாக இருந்தால் சஜித் பீரிஸுக்கு வாக்களியுங்கள். ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறிய அனைவரையும் மீள இணையுமாறு அழைக்கின்றேன். நாட்டைக் காப்பாற்ற பாடுபடுவோம். கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக ஆக்குவதற்கு வாக்களித்தவர்கள் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியினால் மனம் நொந்திருப்பர். ஆனால் திசைகாட்டிக்கு வாக்களிப்பது அதற்குத் தீர்வாக அமையாது.

ஏனைய வேட்பாளர்களிடம் எந்தத் திட்டமும் இல்லை. மக்களுக்கு அனைத்தையும் இலவசமாக தருகிறோம் என்று கூறி வாக்குகளைப் பெற முயற்சிக்கின்றனர். அதை ஒருபோதும் செய்ய முடியாது.

இந்த நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்காக பாராளுமன்றத்தால் எனக்கு இரண்டு வருட ஆணை வழங்கப்பட்டது. இதனை நிறைவேற்றியுள்ளேன். நாட்டில் புரட்சியை ஏற்படுத்துவதற்கான ஆணையை நான் இப்போது மக்களிடம் கேட்கிறேன்".





**ஐ.தே.க கொள்கைகளை நானே பாதுகாத்தேன். உண்மையான ஐ.தே.கவினர் நாட்டைக் கட்டி–யெழுப்பும் திட்டத்தில் எம்மோடு இணைய வேண்டும்!**



**அமைச்சர் அலி சப்ரி;**

"இந்நாட்டில் 76 வருடங்கள் என்ன செய்தார்கள் என்று ஒருசிலர் கேட்கின்றனர். 76 வருடங்கள் ஆட்சி செய்த அரசாங்கங்களினால் முன்னெடுக்கப்பட்ட இலவசக் கல்வி மற்றும் இலவச சுகாதாரம் என்பவற்றால்தான் இன்று அனுரகுமார திசாநாயக்கவினால் பட்டதாரியாக வெளியேறவும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவும் முடிந்துள்ளது. 1971 மற்றும் 1988, 1989 களில் கலவரம் செய்யாமல் இருந்திருந்தால், பல்கலைக்கழக மாணவர்களை வீதிகளுக்கு கொண்டு வராமல் இருந்திருந்தால், தொழிற்சங்கங்கள் என்ற பெயரில் இந்நாட்டின் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களை சீர்குலைக்கதாமல் இருந்திருந்தால், அத்தோடு 26 வருடங்கள் யுத்தம் செய்யாமல் இருந்திருந்தால் கூடுதலான சேவைகளை செய்திருக்க முடிந்திருக்கும் .

கடந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து இந்நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனைத்து கட்சிகளும் கட்சி, இன, மத வேறுபாடின்றி எமது ஆதரவை வழங்க ஒன்றிணைந்துள்ளோம். நாம் மீண்டும் அவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய காஸ் சிலிண்டருக்கு வாக்களிக்குமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்".

**இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர:**

"கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு, மலையகம் தோற்கும் போது தெற்கில் நாம் வென்றோம். இம்முறை வடக்கு கிழக்கில் மக்கள் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாக்களிக்க உள்ளனர். ஜனவரி முதல் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்க இருக்கிறோம். தொட்டதற்கெல்லாம் ஜனாதிபதி ஆணைக் குழு அமைப்பதாக சஜித் கூறுகிறார். ஆணைக்குழு அமைத்து நாட்டை அபிவிருத்தி செய்ய முடியுமா? இரத்தினபுரி மாவட்டத்தில் 125,000 பேர் அஸ்வெசும பெறுகின்றனர். சேவை செய்து காட்டியவர் இருக்க பரீட்சார்த்தமாக வேறொருவருக்கு நாட்டை வழங்கப் போகிறோமா? அரச சொத்துக்களைப் பாதுகாப்பதாக அனுர சொல்கிறார். பஸ்களை எரித்து மின்மாற்றிகளை நாசமாக்கியவர்கள் தான் இதனைச் சொல்கிறார்கள்".

**முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரள:**

"எனது 20 வருட அரசியல் வாழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினதும் சஜித் பிரேமாசவினதும் தலைமைத்துவத்திற்கு இடையிலான வித்தியாசத்தை நான் கடந்த காலத்தில் உணர்ந்தேன். எனது சகோதரருக்கு கட்சியை உடைக்கும் நோக்கம் ஒரு போதும் இருக்கவில்லை. ஆனால் நான் கட்சியை உடைத்துக் கொண்டு சென்றேன். அந்தத் தவறை தற்பொழுது திருத்திக் கொண்டுள்ளேன். பாராளுமன்ற உறுப்பினர் பதவியை அவர்களுக்கே கொடுத்து விட்டு வந்துள்ளேன். எமது மாவட்டத்தில் ஜனாதிபதி பெரு வெற்றி பெறுவார்."

**அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி:**

"எமது நாடு மீண்டும் பங்காளாதேஷாகவோ கொங்கோவாகவோ கானாவாகவோ மாறுவதை காண நீங்கள் விரும்புகிறீர்களா? எமது நாடு படிப்படியாக மீண்டு வருகிறது. உலகில் பல நாடுகள் பட்டினியில் உள்ளன. கிணற்றின் ஆழம் தெரியாமல் இறங்கப் பார்க்கிறார்கள். கொடுத்துப் பார்ப்போம் என்று ஆட்சியைக் கையளித்து அடி வாங்கிய நாடுகள் பல உள்ளன. திருடர்களைப் பிடித்து சிறையில் இடுவதாக அனுர கூறுகிறார். இந்த மேடையில் திருடர்கள் எவரும் கிடையாது. விஜய குமாரதுங்கவை கொலை செய்து விட்டு அதனை நியாயப்படுத்த துண்டுப்பிரசுரம் வெளியிட்டனர். இவர்கள் ஆட்சிக்கு வந்தால் பாசிசவாதத்தை அமுல்படுத்துவர். மிலேச்சத்தனமாக அநியாயங்கள் செய்த அனுர இன்று ஆட்சிக்கு வர கனவு காண்கிறார். பொய் வாக்குறுதிகளை அளிக்காமல் உண்மையை பேசும் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெற வைப்போம்".

பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன, மகாசங்கத்தினர் உள்ளிட்ட ஏனைய மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான அகில எல்லாவல, முதித டி சொய்சா, மற்றும் பல்வேறு கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூர் அரசியல் தலைவர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் இந்த வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டனர்.

# வடக்கு, கிழக்கில் வாழும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவோம்



## கிளிநொச்சியில் எதிர்க்கட்சித் தலைவர்

வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, அபிவிருத்தியை கொண்டு வருவதற்கு வேறெந்த தலைவரும் செய்யாத விடயத்தை நாம் செய்வோம். நாம் அதிகாரத்திற்கு வந்த பிறகு வடக்கு, கிழக்கு மக்களை மையப்படுத்தியதாக சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை கூட்டுவோம். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதேசத்தை பாரிய அபிவிருத்திக்கு இட்டுச் செல்வோம். இதன் ஊடாக ஒன்பது மாகாணங்களையும் அபிவிருத்தியடையச் செய்ய நடவடிக்கை எடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

"ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த 57 ஆவது பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார். சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளாக அனைத்து பாடசாலைகளையும் மாற்றி தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம், நவீன தொழில்நுட்பம், மற்றும் ஆங்கிலமொழிக் கல்வி என்பனவற்றை பயில்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி, புதிய கல்வி முறை ஒன்றின் ஊடாக சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவோம். சகல வசதிகளையும் கொண்ட வைத்தியசாலைகளாக அனைத்து வைத்தியசாலைகளையும் மாற்றி உயர்தரத்திலான அனைத்து வசதிகளையும் கொண்ட வைத்தியசாலை கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவோம்" என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



"ஓய்வூதிய முரண்பாடுகளைத் தீர்த்து சிரேஷ்ட பிரஜைகளின் சேமிப்புக் கணக்குகளுக்கு வழங்கப்பட்ட 15 வீத வட்டியை மீண்டும் பெற்றுக் கொடுப்போம். வீடமைப்புத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்போம்.

விவசாயிகளுக்கு 5000 ரூபாவுக்கு 50 கிலோ கிராம் உரமூடை ஒன்றை வழங்குவோம். மீனவர்களுக்கான எரிபொருள் நிவாரணத்தை வழங்குவோம். விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் முச்சக்கர வண்டி சாரதிகளுக்கும் தொடர்ந்து இந்த நிவாரணங்களை வழங்குவோம்.

இளைஞர் சமூகத்துக்காக இளைஞர் தொழில்நுட்ப மத்திய நிலையங்களை உருவாக்கி, அதன் ஊடாக தகவல் தொழில்நுட்பம், கணிணி விஞ்ஞானம் ஆங்கில மொழி கல்வி, தொழில் உருவாக்கம் போன்றவற்றை சர்வதேச தரத்தில் கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். தொழில் வாய்ப்பில்லாத இளம் தலைமுறையினருக்கு தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

வறுமையை ஒழிக்கின்ற நோக்கில் 24 மாதங்களுக்கான வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம். முதலீடு, உற்பத்தி, நுகர்வு, சேமிப்பு மற்றும் ஏற்றுமதி ஆகிய ஐந்து திட்டங்களின் கீழ் மாதமொன்றுக்கு 20,000 ரூபா வீதம் வழங்கி வறுமையை ஒழிப்போம்" என்று சஜித் பிரேமதாச இங்கு தெரிவித்தார்.

# தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவளித்து தமிழர்களின் கௌரவத்தைக் காப்பாற்றுவோம்!

## அரியநேத்திரனை ஆதரித்து திருக்கோவில் பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழரசுக் கட்சிப் பிரமுகர் ஜெயசிறில் உரை

தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வாக்களித்து தமிழ் மக்களின் கௌரவத்தை நாம் காப்பாற்ற வேண்டும் என்று அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் மண்டானை பிரதேசத்தில் நடைபெற்ற தமிழ் பொதுவேட்பாளருக்கான பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும், பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.ச சங்குக்கு வாக்களித்து தமிழரின் கௌரவத்தைக் காப்பாற்றுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.



தமிழ் பொதுவேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனுக்கு ஆதரவளிக்கும் இந்நிகழ்வு மண்டானை பிரதேசத்தில் நடைபெற்ற போது அப்பகுதி மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

அங்கு பொதுவேட்பாளரின் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து ஜெயசிறில் உரையாற்றுகையில் "வேட்பாளரும் நீங்களே, வாக்காளரும் நீங்களே. இது எமது இரத்தம். கடந்த காலத்தில் எட்டு ஜனாதிபதிகளுக்கு வாக்கு அளித்து தமிழர்கள் கண்ட பலன் என்ன? திருக்கோவில் பிரதேசத்தை முன்னேற்றுவோம் என்று கூறி பலர் வந்தார்கள் . ஆனால் கண்ட பலன் எதுவுமில்லை. தென்னிலங்கை வேட்பாளர்களின் பின்னால் செல்லும் கூட்டத்தை இன்னும் தமிழர்கள் நம்பலாமா?

இன்று இங்குள்ள மருத்துவமனை கூட ஆறு வைத்தியருடன் பிரதேச வைத்தியசாலை போன்று இயங்கி வருகிறது. இதுதானா இவர்களது அபிவிருத்தி?

இங்கு வெள்ளம், கொரோனா வந்தால் நாங்கள் வருவோம். ஆனால் இன்று வெள்ளை, சிவப்பு வாகனங்களில் வருபவர்கள் எப்பொழுதாவது இங்கு வந்தார்களா?

தேர்தலுக்குப் பிறகு இவர்களை உங்களால் காண முடியுமா? இல்லை. ஆனால் அவர்கள் தருவதை வாங்கிக் கொள்ளுங்கள். உங்களது வாக்குகளை சங்குக்கு இடுங்கள். சங்கே முழங்கு. சங்கையை காப்பாற்றுவோம்" என்று தெரிவித்தார்.

**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)

# நேரடி வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்க ஸ்திரத்தன்மை அவசியம்

**ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் நெரஞ்சன் டி சில்வா தேவா ஆதித்ய**



ஒரு நாடு நேரடி வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கு, முதலீட்டாளர்கள் முதலீடு செய்யும் பணம் பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்தும் வகையில், அந்நாட்டில் ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்தி, நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் நெரஞ்சன் டி சில்வா தேவா ஆதித்ய தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 94 சட்டங்கள் இலங்கையை வளமான மற்றும் போட்டிமிக்க பொருளாதாரம் கொண்ட நாடாக மாற்ற வழிவகுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சரிந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த சரியான மற்றும் துணிச்சலான தீர்மானங்களினால் இலங்கை இதுவரை பல சாதனைகளைப் புரிந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு, பிளவர் வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நேற்று (16) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே நெரஞ்சன் டி சில்வா தேவா ஆதித்ய இதனைக் குறிப்பிட்டார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து வேலைத் திட்டத்தை ஆரம்பித்து, நாட்டின் நிதித்துறையை பலப்படுத்தவும் துணிச்சலுடன் செயற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# தேர்தலில் வெற்றிபெற சதி செய்ய வேண்டிய தேவை அரசுக்கு இல்லை

**பாதுகாப்பும் நிலைநாட்டப்படும் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு**

நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் முப்படைகளின் தளபதி என்ற வகையில், நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்வார் என முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இந்த தேர்தலில் வெற்றிபெற சதி செய்ய வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை எனவும் பாதுகாப்பு படையினரை தயார் நிலையில் வைத்துள்ளதாகவும், நாட்டில் அமைதியை நிலைநாட்ட தேவையான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்வார் எனவும் அவர் தெரிவித்தார்.

காலி, நெலுவாவில் நேற்று (16) ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த மனுஷ நாணயக்கார, தொடர்ந்தும் உரையாற்றுகையில்,



மக்கள் துன்பப்பட்ட யுகத்துக்கு மீண்டும் 21ஆம் திகதி நாம் திரும்பிச் செல்ல முடியாது. அந்த துன்பத்தை மீண்டும் அனுபவிக்க நாங்கள் விரும்பவில்லை. நாட்டை இன்னொரு மோதலை நோக்கி தள்ள வேண்டுமா? மக்கள் எதிர்கொண்ட இன்னல்களை நினைவுகூர்ந்து எதிர்வரும் 21ஆம் திகதி தீர்க்கமான தீர்மானத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றோம்.

இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு, மின்சாரம், எரிபொருள் மற்றும் எரிவாயு பற்றாக்குறையால் குழந்தைகள் அவதிப்படும்போதும், மக்கள் வரிசையில் நின்று இறக்கும்போதும் இந்த நாட்டு மக்கள் தலைவர்களிடம் உதவி கோரினர். அந்த மக்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட நிவர்த்தி செய்ய எந்தத் தலைவரும் முன்வரவில்லை, ஏனெனில் அவர்களால் இந்த நாட்டைப் பொறுப்பேற்க முடியவில்லை.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அன்று மக்கள் அனுபவித்த துன்பங்களை புரிந்து கொண்டார். மக்களின் நலனுக்காக அச்சமின்றி உசிதமான முடிவுகளை எடுத்தார். அவைகள் அரசியல் ரீதியாக ஆபத்தான முடிவுகளாகும். நாங்கள் அரசியல் தற்கொலை செய்து கொள்கிறோம் என மக்களால் விமர்சிக்கப்பட்டோம்

ஆனால், நாங்கள் அந்த முடிவுகளை எமது மக்களுக்காக எடுத்தோம். இரண்டரைவருடங்களுக்குள் மக்களுக்கு எரிபொருள் மற்றும் எரிவாயுவை வழங்கி நாட்டை ஸ்திரப்படுத்த முடிந்தது. எமது மக்கள் அதை நினைவுகூருகிறார்கள். மேலும், அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் தங்கள் நன்றியைச் செலுத்த விரும்புகிறார்கள்.

எரிவாயு, எரிபொருள் மற்றும் மருந்துப் பற்றாக்குறையினால்

04

# தேர்தல் தினத்தில் தேவையான பாதுகாப்பு வழங்க ஏற்பாடு

**ஊரடங்கு நிலை குறித்த தகவல் உண்மையில்லை**

ஜனாதிபதி தேர்தலின் வாக்களிப்பு தினத்தன்று ஊரடங்கை பிரகடனப்படுத்தும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லையென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ள நிலையில், பாதுகாப்பு படையினர் தயார் நிலையிலுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், தேர்தல் காலத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும் தேவையான நேரத்தில் உதவுவதற்கு பாதுகாப்பு படையினர் தயார் நிலையில் இருப்பதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஊரடங்கை அறிவிப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை எனவும் இது குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் மாத்திரமே உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



அத்துடன், நாடாளவிய ரீதியில் இதுவரை 500 தேர்தல் பிரசார கூட்டங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் எதுவித வன்முறை சம்பவங்களும் இடம்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார். இந்நிலையில், நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் பொலிஸார் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நபிகளாரின் வாழ்க்கைத் தத்துவத்தை சமூக நலனுக்காக பயன்படுத்துவோம்

**பிரதமர் தினேஷ் குணவர்தன வாழ்த்து**

உலக மக்களால் போற்றப்படும் நபிகளாரின் வாழ்க்கை முன்மாதிரிகளை மதிக்கும் இலங்கை உட்பட உலகெங்கிலும் வாழும் இஸ்லாமியர்களின் நல்வாழ்வுக்கு பிரார்த்திப்பதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மனிதநேயம் நிறைந்த உயர்ந்த மானுடப் பெறுமானங்களை கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட நபிகளாரின் பிறந்தநாளை உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் மிகுந்த மகிழ்ச்சியுடனும் சமயக் கிரியைகளுடனும் கொண்டாடும் நிலையில், அவர் போதித்த வாழ்க்கைத் தத்துவத்தின் மூலம் சமூகத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே அவரை கௌரவிப்பதற்கான சரியான வழியாகும்.



சுபீட்சம், விடுதலை, சமாதானம், மகிழ்ச்சி மற்றும் மன அமைதி ஆகியவற்றைக் கொண்டுவரும் ஒரு முழுமையான வாழ்க்கை முறையை மனித குலத்திற்கு வழங்கிய நபிகளாரின் மனிதாபிமான வாழ்க்கைத் தத்துவத்தை சமூக நன்மைக்காக முன்னெப்போதையும் விட பயன்படுத்த வேண்டிய காலகட்டம் இதுவாகும் என தெரிவித்துள்ளார்.

# தொழில்நுட்ப பாடங்களை அறிமுகப்படுத்த எதிர்த்தவர்கள் ஜே.வி.பி. தரப்பினர் மட்டுமே

**அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன**

இலங்கை முழுவதும் தொழில்நுட்பக் கல்வியை அறிமுகப்படுத்துவதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது வேறு எந்தக் கட்சியோ செயற்படவில்லை எனவும் அதற்கெதிராக மக்கள் விடுதலை முன்னணியினர் மட்டுமே செயற்பட்டதாகவும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகதத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

04





ஜனாதிபதி தேர்தல் 2024;

# சர்வதேச கண்காணிப்பாளர் 71 பேர் நாட்டுக்கு வருகை

சர்வதேச தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளைச் சேர்ந்த 71 பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.





அவர்களில் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 43 பேரும் பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த 22 பேரும் தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பிலிருந்து 6 பேரும் வருகை தந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, அண்டை நாடுகளைச் சேர்ந்த மேலும் 7 பேரும் இந்த செயற்பாட்டில் இணைந்து கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து 34 பார்வையாளர்கள் மற்றும் 3 கூடுதல் ANFREL பிரதிநிதிகளும் எதிர்வரும் நாட்களில் இலங்கை வந்தடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, 22 தேர்தல் தொகுதிகளிலும் விரிவான கண்காணிப்பை உறுதி செய்வதற்காக பார்வையாளர் குழுக்கள் தங்களது நடவடிக்கைகளைத் ஆரம்பித்துள்ளதாகவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலையகப் பெருந்தோட்ட மக்களின்

# நூறு வீதமான வாக்குகளும் ஜனாதிபதி ரணிலுக்கே

**இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ்**

**(பதுளையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்)**



ஜனாதிபதி தேர்தலில், மலையகப் பெருந்தோட்டத்துறை மக்கள் தமது நூற்றுக்கு நூறு வீதமான வாக்குகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கி அவரை வெற்றிபெறச்செய்ய வைப்பது உறுதி என இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இதில் எந்த மாற்றமும் ஏற்படாது என தெரிவித்த அவர், எதிர்வரும் 22 ஆம் திகதியும் ரணில் விக்கிரமசிங்கவே இந்த நாட்டின் ஜனாதிபதி எனவும் பெருந்தோட்டத்துறை மக்கள் ஜனாதிபதியின் வெற்றியில் பங்குதாரர்களாக வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

ஜீவன் தொண்டமான், வடிவேல் சுரேஷ், வேலுகுமார், தலதா அத்துக்கோரள என மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பலரும் கட்சி, வர்ணம், கட்சியின் சின்னம், பிரதேசம் என்ற பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைந்து ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்த வகையில், மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களான இராதாகிருஷ்ணனின் உறுப்பினர்களும் திகாம்பரத்தின் உறுப்பினர்களும் கூட இம்முறை ரணிலுக்கே ஆதரவளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். 'இயலும் ஸ்ரீ லங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் பதுளையில் வில்ஸ் பார்க் மைதானத்தில் நேற்று (16) நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய வடிவேல் சுரேஷ் ,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் மலையக பெருந்தோட்ட பகுதிகளில் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மேலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அத்துடன் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு, அவர்களுக்கான தனி வீடுகள் உட்பட பல்வேறு வேலைத் திட்டங்களை ஜனாதிபதி முன்னெடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 9 மாதங்களில் 14 இலட்சமாக அதிகரிப்பு



நாட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, இவ் வருடம் சுமார் 14 இலட்சமாக அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,395,773 ஆக அதிகரித்துள்ளது. இதில், பெப்ரவரி மாதத்திலேயே பெருமளவிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகவும் அந்த எண்ணிக்கை 218,350 ஆக பதிவாகியுள்ளதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களில் 200,000 க்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைத் தந்துள்ளனர்.

இம்மாதம் முதலாம் திகதி முதல் கடந்த 8ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 33,105 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தே.தொ.ச, ஐ.ம.ச உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு

**(பதுளையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்)**

திகாம்பரம் தலைமையிலான தேசிய தொழிலாளர் சங்கம் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பகமுவ, வலப்பனை மற்றும் நுவரெலியா உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள் உள்ளிட்ட தொழிற்சங்க தலைவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளனர். பதுளையில் நேற்று (16) நடைபெற்ற 'ரணிலால் இயலும்' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்ட அவர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவை வழங்குவதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




### நாட்டை முன்னேற்ற உலக நட்பு நாடுகள் உதவி

# இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையில் விரிவான அபிவிருத்தி

## கந்தளாயில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களில் முன்னெடுத்த வேலைத்திட்டத்தின் காரணமாக, நாட்டை முன்னோக்கி நகர்த்தும் பயணத்துக்கு இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட அனைத்து நட்பு நாடுகளினதும் ஆதரவு கிடைத்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இந்திய அரசாங்கத்துடன் இணைந்து திருகோணமலையை பாரிய அபிவிருத்திகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, 2025ஆம் ஆண்டு மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதன் மூலம் சமயலறை யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்படும் எனவும் குறிப்பிட்டார்.

கந்தளாய் புகையிரத நிலையத்துக்கு முன்பாக நேற்று (16) நடைபெற்ற 'ரணிலால் இயலும்' வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, இன்று தேசப்பற்றை பற்றி பேசும் சஜித்தும் அநுரவும் கடந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மக்களை கைவிட்டு ஓடிவிட்டதாகவும் இரண்டு வருடங்களின் பின்னர் நாட்டின் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இன்று 38 பேரும் நாட்டை மீட்க போராடுவதாகவும் குறிப்பிட்டார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க,

சமையலறையிலுள்ள பிரச்சினைகளை சிந்தித்தே அநேகமான விடயங்களை மேற்கொண்டேன். 2025 இல் சமையலறை யுத்தத்தை நிறைவு செய்வேன். இவ்வாறு வீழ்ந்த நாடுகள் எழுச்சிபெற பல வருடங்கள் பிடித்தன. அரச ஊழியர்கள் வேலைகளிலிருந்து நீக்கப்பட்டனர். சம்பளம் குறைக்கப்பட்டது. ஆனால், அவை எதனையும் நான் செய்யவில்லை. ஸ்திரநிலை ஏற்பட்டாலும் மீண்டும் சரிவு ஏற்படலாம். உறுதியான நிலையை ஏற்படுத்தவே 5 வருட காலம் கோருகிறேன். சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தைத் தவிர வேறு வழியில்லை. அந்தத் திட்டத்தைப் பாதுகாத்து முன்னேறவேண்டும். ஆகையினாலேயே அடுத்த 5 ஆண்டுகளுக்கு மக்கள் ஆணையை கோருகின்றேன். போட்டி நிறைந்த ஏற்றுமதி பொருளாதாரத்தை மேற்கொண்டு பணம் சம்பாதிக்கவேண்டும். அதற்காக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை செயற்படுத்தியுள்ளோம். இப்பகுதியில் துரியன் சாகுபடி செய்ய வேண்டும். துரியன் பழங்களை எடுத்து சீனாவுக்கு அனுப்பலாம். துரியன் ஏற்றுமதி மூலம் தாய்லாந்து 1,000 மில்லியன் டொலர்களைச் சம்பாதிக்கின்றது. அடுத்த 05 வருடங்களில் கந்தளாய் பிரதேசத்தை விவசாய பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். மேலும், திருகோணமலை துறைமுகம் இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்யப்படுகிறது.

### தொலைநோக்குடனான...

கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்த அவர், உங்களுக்காக நிற்கும் உங்கள் தலைவருடன் தாய்நாட்டின் வெற்றியை உறுதிப்படுத்த நீங்கள் தரும் ஆதரவுக்கு நான் நன்றி கூறுகின்றேன்.

எங்களிடம் தொலைநோக்கு பார்வையும் திட்டமிடலும் உள்ளது. நாங்கள் வெறும் அதிகாரத்திற்காகவோ தேர்தலுக்காகவோ போட்டியிடவில்லை.

வெற்றி பெறுவதற்காகவே தேர்தலில் போட்டியிடுகிறோம். வெற்றி பெற்று நாட்டை கட்டியெழுப்புவோம். எங்களிடம் சரியான திட்டமும் ஏற்பாடும் உள்ளது என அவர் தெரிவித்தார்.

### அநுர ஆட்சிக்கு வந்தால்...

தெரிவித்த அவர், அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாக்களிப்பது வீண் எனவும் குறிப்பிட்டார். ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து, நிந்தவூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலே கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்த, ரிஷாட் பதியுதீன், மேலும் தெரிவிக்கையில்,

வீழ்ந்துபோயுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப ஊழலில்லாத அரசாங்கம் அவசியம். சமூகங்களிடையே நல்லுறவு நிலவ, இனவாதமில்லாத ஆட்சியாளர்கள் அவசியம். இவையிரண்டும் சஜித் பிரேமதாசவின் ஆட்சியிலேயே சாத்தியம்.

### டொனால்ட் ட்ரம்ப் மீது...

டொனால்ட் டிரம்ப் மீது மீண்டும் கொலை முயற்சி தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும் அதனை உளவுத்துறை அதிகாரிகள் முறியடித்துள்ளதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில், புளோரிடாவின் வெஸ்ட் பாம்பில் கோல்ஃப் விளையாடிக் கொண்டிருந்த டொனால்ட் ட்ரம்பை குறிவைத்து, அவர் விளையாடிக் கொண்டிருந்த இடத்திலிருந்து 365 முதல் 400 மீற்றர் தொலைவில், கோல்ஃப் மைதானத்தின் கட்டுமானப் பாதையிலுள்ள புதர்களிலிருந்து துப்பாக்கி சுடும் வீரரொருவர் தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளார்.

இதனை அவதானித்த பாதுகாப்புப் தரப்பினர், உடனடியாக துப்பாக்கிச்சூடு நடத்தி குறித்த நபரின் முயற்சியை முறியடித்துள்ளனர்.

இதன்போது, சம்பவ இடத்திலிருந்து ஏகே 47 ரக துப்பாக்கி மற்றும் சில கருவிகளை கண்டெடுத்த பாதுகாப்பு அதிகாரிகள், தப்பிச்செல்ல முயன்ற துப்பாக்கிதாரியையும் கைதுசெய்துள்ளனர்.

### தேர்தல் விதிமுறை மீறல்கள்...

184 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தேர்தல்கள் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதன்படி, ஜுலை 31ஆம் திகதியிலிருந்து செப்டெம்பர் 15 ஆம் திகதி வரை சுமார் 4,215 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதில் 1,360 முறைப்பாடுகள், தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கும், 2,855 முறைப்பாடுகள் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கும் கிடைக்கப்பெற்றுள்ளன. இக் காலப்பகுதியில் தேர்தல் வன்முறைகள் தொடர்பாக 30 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இதுவரையில் தங்களது கிடைக்கப்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 3,641 முறைப்பாடுகள் தொடர்பாக தீர்வு கண்டுள்ளதாகவும் எஞ்சிய 574 முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

### ஒன்றிணைந்த நாட்டுக்குள்...

நேற்று முன்தினம் (15) நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

ஒன்றிணைந்த நாட்டுக்கு அதிகார பகிர்வுக்காக குறுகிய காலத்துக்குள் மாகாண சபை தேர்தலை நடத்துவோம். மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக்கொள்ளக்கூடாது. அத்துடன், வடக்கு, கிழக்கு மக்களுக்காக நன்கொடையாளர்கள் மாநாட்டை நடத்தவுள்ளோம். வட, கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

### சிறிதரன் எம்.பியுடன்...

தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். இதன்போது, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனை அவரது இல்லத்தில் நேற்று (16) சந்தித்து கலந்துரையாடியிருந்ததுடன், தனது தேர்தல் விஞ்ஞாபனத்தையும் சிறிதரன் எம்.பியிடம் கையளித்துள்ளார். மேலும், யாழ்ப்பாணத்தில் பலரையும் சந்தித்த மயில்வாகனம் திலகராஜ், தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை கையளித்து கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### நாட்டை அழிவிலிருந்து...

நாட்டுக்கு பங்களாதேஷின் நிலையே ஏற்பட்டிருக்கும். இன்று பங்களாதேஷில் 19 மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டள்ளது. 213 ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. பங்களாதேஷில் முதலீடு செய்துள்ள இலங்கை ஆடைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் இன்னும் ஒருமாத காலத்துக்கு அந்நாட்டின் நிலைமையை அவதானித்து தமது வர்த்தகத்தை வேறு நாட்டுக்கு அல்லது இலங்கைக்கு மாற்றவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இத்தகைய அழிவிலிருந்து இலங்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காப்பாற்றினார். அப்படி காப்பாற்றப்பட்ட நாட்டில், மக்கள் இன்னல்களுக்கு ஆளானபோது தன்னைப் பாதுகாத்துக்கொள்ள ஓடியவர்கள் இன்று தமக்கு அதிகாரம் வழங்குமாறு கேட்கின்றனர்.

எனவே, இந்தப் பயணத்தைத் தொடர்வதா? சிரமத்துடன் கட்டியெழுப்பிய நாட்டை முன்னோக்கி நகர்த்துவதா? அல்லது ஆரம்பித்த வேலைத்திட்டத்தை நிறுத்தி மாற்றங்களைச் செய்து அழிப்பதா? என்பதை இந்நாட்டு மக்கள் செப்டெம்பர் 21ஆம் திகதி தீர்மானிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

### ஆய்வுகூட பரிசோதனை...

வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் டொக்டர் ரத்னசிறி ஏ.ஹேவகே தெரிவித்தார்.

நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்கள் தொடர்பான பரிசோதனைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்களே இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளதாகவும் நோயாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதே இதன் நோக்கமெனவும் அவர் குறிப்பிட்டார்.

வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு 40 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு நோயாளர்களுக்கு இந்தச் சலுகைகளை வழங்க வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, வைத்தியசாலையின் ஆய்வகத்தில் மேற்கொள்ளப்படும் முழு இரத்த பரிசோதனை உட்பட பல பரிசோதனைகளுக்கான கட்டணம் 50 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், 150 ரூபாவை செலுத்தி இந்த பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் எனவும் ஏனைய பரிசோதனைகளுக்கான கட்டணங்களும் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

### புற்றுநோய் PETஸடகேன்...

வசதியை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் (15) கைச்சாத்திடப்பட்டுள்ளது.

புற்றுநோயைக் கண்டறிவதற்கும் கண்காணிப்பதற்கும் முக்கியமான பொசிட்ரான் எமிஷன் டோமோகிராப்பி (Positron Emission Tomography (PET) scans ) ஸ்கேன்களில் பயன்படுத்தப்படும் கதிரியக்க மருந்தான Fluorodeoxyglucose (FDG) இன் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதே இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும்.

தற்போது, இந்தியாவிலிருந்து (Positron Emission Tomography (PET) scans ) கருவியை ஜ ,இலங்கை இறக்குமதி செய்கிறது. இதன் குறுகிய கால ஆயுட்காலம் காரணமாக, இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் 97 சதவீதமானவை நாட்டை அடையும் நேரத்தில் பயன்படுத்த முடிவதில்லை.

இதன் விளைவாக, இலங்கையில் தற்போது உள்ள ஒரேயொரு PET ஸ்கேனர் வாரத்திற்கு ஒரு முறை மாத்திரமே பயன்படுத்தப்படுகிறது. இதனால் நோயாளிகளுக்கு பயன் படுத்தப்படும் இந்த ஸ்கேன்களுக்காக அதிக தொகையை செலவிட வேண்டியுள்ளது. விசேடமாக தனியார் வைத்தியசாலையில் இதனை மேற்கொள்வதற்காக இரண்டு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவை செலவிட வேண்டியிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தியாவில் இதனை மேற்கொள்வதற்காக இலங்கை நாணயத்தில் 40 ஆயிரம் ரூபாவை செலுத்த வேண்டும்.

இந்த உடன் படிக்கையின் மூலம் இலங்கைக்கு கிடைக்கவுள்ள புதிய சைக்ளோட்ரான் வசதி மற்றும் உள்நாட்டில் FDG க்கான தயாரிப்பு மூலம், அரசாங்க வைத்தியசாலைகளில் PET ஸ்கேன் வசதியும் அதிகரிக்கும்.

அத்தோடு இதற்கான செலவையும் குறைக்க முடிவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் புற்றுநோயாளர்களை கண்டறிதல் மற்றும் புற்றுநோயாளர்களுக்கான சிகிச்சையை மேம்படுத்துவதற்கு பெரிதும் உதவும் என்றும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

### திறமையில்லாத தலைவரை...

எரான் ஏன் துணை போகின்றார்கள் எனவும் கேள்வியெழுப்பினார். மேலும், சர்வதேச நாணய நிதியத்துக்கு எதிரான அநுரகுமார மற்றும் நாணய நிதியத்துடன் இணைந்து முறையாக செயற்பட முடியாத சஜித்தின் கொள்கைக்காக இவர்கள் முன்நிற்கின்றார்கள் என்பதையும் நம்ப முடியாதுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க,

நாட்டில் வாகனங்களின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய அனைத்து பொருட்களுக்குமான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. 06 மாதங்களுக்கு முன்னர் வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவது தொடர்பாக பாராளுமன்றத்தில் தெளிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. ஒக்டோபர் மாதத்துக்குள் பொது போக்குவரத்துக்கான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என நாம் எதிர்பார்த்தோம்.

2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக வாகனங்களை இறக்குமதி செய்வதில் உள்ள கட்டுப்பாடுகளை நீக்க முடியும் என நம்புகின்றோம்.

இது தேர்தலை இலக்காக கொண்டு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையல்ல . ஆறு மாதங்களுக்கு முன் அறிவிக்கப்பட்ட ஒரு தளர்வு முறையாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி மீண்டும் பொருளாதார நெருக்கடியை நாடு எதிர்கொள்ளாதவகையில் நாணய கையிருப்பு அளவு வீழ்ச்சியடையாத வகையில், இருப்புக்கள் மற்றும் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படாத வகையிலேயே இந்த தளர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

நாட்டின் அரசாங்கம் நிதி ஸ்திரத்தன்மையின் அடிப்படையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். வரி நிர்வாகம் வலுவாக இருக்கவேண்டும். அதற்கான சட்ட கட்டமைப்பை தயாரிக்க வேண்டும் என தொடர்ந்து கூறி வந்தோம்.

மோசமான பொருளாதார நெருக்கடியின்போது வரி சீர்திருத்தங்களைக்கொண்டு வந்தோம். தொடர்ந்து அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொண்டோம். 8.2 சதவீதமாக இருந்த வருமானம் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் 14 சதவீதத்தை எட்டும் என நம்புகிறோம்

இலங்கைக்கு கடனுதவி வழங்கியவர்களுடனும் சர்வதேச நிதி நிறுவனங்களுடனும் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின்படி, அரசாங்கத்தின் வருமானத்தை 15 சதவீதம் வரை அதிகரிப்பதே எமது நோக்கமாகும்.

வரி மூலமான வருமானத்தில் கவனம் செலுத்தி, குறிப்பாக வருமான வரி திருத்தத்துக்கு சில நடவடிக்கைகளை எடுப்பது பொருத்தமானது என கருதி செப்டம்பர் 2023 இல் சர்வதேச நாணய நிதியத்துடன் தேவையான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தோம். மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், வருமானம் 15 சதவீதத்திற்கு குறையாமல் இருக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கிடையில் நிவாரணம் வழங்கப்படவேண்டியவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளன. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான சமகால அரசாங்கமே வறிய மக்கள் பற்றி சிந்தித்து உரிய நடவடிக்கைளை மேற்கொண்டது என அவர் தெரிவித்தார்.

### தனியார் துறையின் சம்பளம்...

குறைந்தபட்ச அடிப்படை சம்பளம் 21,000 ரூபாவாக அதிகரிப்பதற்காக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று முன்தினம் (15) கையொப்பமிட்டதாகவும். அதற்கமைய, இந்த சம்பள அதிகரிப்பு இம்மாதம் முதல் அமுலுக்கு வருவதாகவும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

ஊழியர்களின் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் ஊழியர்களுக்கான பணிக்கொடை ஆகியவற்றில் குறைந்தபட்ச ஊதியமாக இது கருதப்படவேண்டும் எனவும் அமைச்சு அறிவித்துள்ளது.

தனியார்துறை முதலாளிகள், இவ்வாண்டு செப்டம்பர் மாதம் முதல் தங்கள் ஊழியர்களுக்கு தேசிய குறைந்தபட்ச மாத ஊதியமாக 17,500 ரூபாவுடன் 2005 இலக்கம் 36 மற்றும் 2016 இலக்கம் 4 யின் கீழான வரவு செலவு நிவாரண கொடுப்பனவு சட்டத்தினூடாக, செலுத்தப்படவேண்டிய 3,500 ரூபா வரவு செலவு கொடுப்பனவு அடங்களாக ஆகக்குறைந்த சம்பளம் 21 ,000 ரூபா வழங்கப்பட வேண்டும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அதன்படி , ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் பணிக்கொடை தொகை ஆகியவற்றுக்கு குறைந்தபட்ச ஊதியம் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நாட்டை பிளவுபடுத்த...

பற்றி பேசுவதில்லை. நாட்டை பிளவுபடுத்தும் புதிய அரசியலமைப்பு பற்றி பேசி வருவதாகவும் எக்காரணங்களுக்காகவும் நாட்டை பிளவுபடுத்த தாம் இடமளிக்கபோவதில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். அம்பாறையில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு குறிப்பிட்ட அவர், மேலும் தெரிவிக்கையில்,

தேசியத்தை பாதுகாப்பதற்கு அனைவரும் எம்முடன் கைகோர்க்க வேண்டும். பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் நிச்சயம் தோற்றம் பெறும் என்பதை உறுதியாக குறிப்பிடுகிறேன். 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எம்மை ஊழல்வாதிகளாக சித்தரித்து அதிகாரத்தை கோரியவர்கள் இம்முறையும் அதிகாரத்தை கோருகிறார்கள். வெறுப்பினை முன்னிலைப்படுத்தி செயற்படும் இவர்களால் பொருளாதாரத்தை ஒருபோதும் மேம்படுத்த முடியாது என அவர் தெரிவித்தார்.

### ரணில் ஆட்சிக்கு வந்திருக்காவிடின்...

தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து நேற்று (15) நுவரெலியாவில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனை தெரிவித்த செந்தில் தொண்டடமான், மேலும் தெரிவிக்கையில்,

2021, 2022ஆம் ஆண்டுகள் இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்த காலகட்டமாகும். யுத்தத்தின் போதுகூட இத்தகைய நெருங்கடிகளை இலங்கை எதிர்கொண்டிருக்கவில்லை. நாட்டை பாதுகாத்து முன்னோக்கிக் கொண்டுசெல்ல எவராவது வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதும் ஒருவரும் முன்வரவில்லை. ரணில் விக்கிரமசிங்க அன்று நாட்டை பொறுப்பேற்றிருக்காவிடின், இன்று எரிவாயுவின் விலை 20 ஆயிரத்தை கடந்திருக்கும். அரிசியின் விலை 1000 ரூபாவையும் பெற்றோலின் விலை 3000 ரூபாவையும் கடந்திருக்கும். தற்போது நாடு இக்கட்டான நிலையை கடந்து பயணித்துக் கொண்டிருக்கும் தருணத்தில் அனைவரும் ஆட்சியை பொறுப்பேற்க முன்வருகின்றனர். நாட்டை மீட்டெடுத்த தலைவருடன் அடுத்த ஐந்து ஆண்டுகளும் பயணித்தால் நாடு முன்னோக்கி நகரும். ஏனையவர்களை நம்பி வாக்களித்தால், அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்ள மீண்டும் வரிசையில் நிற்க வேண்டியநிலையே ஏற்படும். இதற்கு இ.தொ.கா ஒருபோதும் இடமளிக்காது. அதனால்தான் இ.தொ.கா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்க முடிவெடுத்தது என அவர் தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்
(17.09.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
எதிர்பார்ப்புகள் நிறைவு தரும். பொருளாதாரம் உடல் நிலை உத்தியோகம் போன்றவற்றில் முன்னேற்றம் காணப்படும்.

**ரிஷபம் :**
மனக்குழப்பம் அதிகரிக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது.

**மிதுனம்:**
கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டும். குடும்ப பிரச்சினைகள் அதிகரிக்கும்.

**கடகம்:**
சேமிப்புகள் குறையலாம். திடீர் இடம் மாற்றம் உத்தியோக மாற்றம் வரலாம்.

**சிம்மம்:**
புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதாரம் முன்னேற்றம் உண்டு.

**கன்னி:**
விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். இடமாற்றம் வீடு மாற்றம் எதிர்பாராத விதத்தில் அமையும்.

**துலாம்:**
பிரியுங்கள் சற்று கூடுதலாக இருக்கும். ஆரோக்கியத்தில் சீர்கேடுகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:**
புது முயற்சிகளில் வெற்றி கிட்டும். வாழ்வில் திருப்பு முனை உண்டாகும் நேரம் இது.

**தனுசு:**
புதிய வழக்குகள் கூட தோன்றலாம். மனக்குழப்பங்கள் உருவாகும்.

**மகரம்:**
பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். புதிய முயற்சிகளில் தடைகளும் தாமதங்களும் ஏற்படும்.

**கும்பம்:**
வியாபார போட்டிகளை சமாளிக்க வேண்டிய சூழல் உருவாகும். செலவு கூடுதலாக இருக்கும்.

**மீனம்:**
சொல்லித் தந்த எதிரிகள் விலகுவர். தொழில்களும் சிறப்பாக இருக்கும்.

### தேர்தலில் வெற்றிபெற... (3ஆம் பக்கத் தொடர்)

பாதிக்கப்பட்டுள்ள மக்களின் தேவைகளை ஜனாதிபதியே நிறைவு செய்தார். தேவைப்படுபவர்களுக்கு உதவுவது தவறு என்றால், அவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது தவறு என்றால், மக்கள் எங்களுக்கு எதிராக வாக்களிக்கலாம்.ஆனால், எமது முயற்சியே இந்த நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவந்தது என்பதை புரிந்து கொண்ட மக்கள் அச்சமின்றி வாக்களிப்பார்கள். இந்த நாட்டில் உள்ள பெரும்பாலான மக்கள் ஆபத்தில் இருப்பதை அறிவார்கள். நாளாந்தம் இந்த நாட்டைக் அதலபாதாள குழிக்குள் தள்ள ஒரு குழுவொன்று இயங்கி வருகின்றது.

அக்குழுவினர் அபிவிருத்தி திட்டங்களை நிராகரித்து, நாட்டின் முன்னேற்றத்தை தங்கள் சொந்த நலன்களுக்கு அச்சுறுத்தலாக பார்க்கின்றனர். இவர்களால், மக்கள் மீண்டும் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள் என தெரிகிறது. ஆனால், கடந்த காலங்களில் அவர்களின் வழியைப் பின்பற்றியபோது நாட்டுக்கு என்ன நடந்தது என்பதை மக்கள் அறிந்துகொண்டார்கள். எனவே தற்போது மக்கள் அவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு எடுக்க வேண்டிய தீர்மானத்தை எடுப்பார்கள். மேலும், 2 முதல் 2.5 மில்லியன் வாக்குகளை பெற்றுக்கொள்ளும் முயற்சியில் போலியான பேரணிகளை நடத்தும் சில குழுக்கள் வன்முறையைத் தூண்ட முயற்சிப்பதாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருவதாக முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் குறிப்பிட்டார்.

### தொழில்நுட்ப பாடங்களை... (3ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சுயேட்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக வக, கஹஹேன மற்றும் தித்தெனிய பிரதேசங்களில், நேற்று முன்தினம் (15) நடைபெற்ற மக்களை தெளிவுபடுத்தும் விசேட கலந்துரையாடல் நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவத்தார்.

இதன்போது, மக்கள் விடுதலை முன்னணிக்கு தொலைநோக்குப் பார்வை இல்லை என தெரிவத்த அமைச்சர், மேலும் குறிப்பிடுகையில்,

பிறந்த மற்றும் பிறக்காத தலைமுறையினரின் குழந்தைகளுக்காக நான் இந் நாட்டுக்காக அதிக வேலை செய்துள்ளேன். நாங்கள் பாடசாலைக்கு செல்லும்போது நாட்டில் விஞ்ஞானம், கலை, வணிகவியல் பாடங்கள் மட்டுமே இருந்தன. அவற்றைப் படிப்பதால் , எதிர்காலத்தில் பிறக்கும் குழந்தைகள் இந்த உலகத்தை எதிர்கொள்ளமுடியாது. கல்வி அமைச்சர் என்ற வகையில் தொழில்நுட்பம் என்ற பாட நெறியை நாட்டுக்கு அறிமுகப்படுத்தினேன். அதில் தகவல் தொழில்நுட்பம், உயிரியமைப்புகள் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான அறிவியல் போன்ற பாடங்களும் அடங்குகின்றன.

அதன் கீழ், நாட்டின் மாணவர்களுக்காக தொழில்நுட்பம் கற்பதற்காக, இலங்கை முழுவதும் 251 மஹிந்தோதய ஆய்வுகூடங்களை அமைத்துள்ளோம். தற்போது, நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் 13 தொழில்நுட்ப பீடங்கள் உள்ளன. எனது ஹோமாகம தொகுதியில், ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப பீடம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப பீடம் என இரண்டு தொழில்நுட்ப பீடங்கள் மட்டுமே உள்ளன. இலங்கையில் ஆயிரக்கணக்கான பாடசாலைகளை நாம் கட்டியெழுப்பியபோது அவற்றை அழிக்க ஜே.வி.பி. நடவடிக்கை எடுத்தது. நாட்டின் நலனுக்காக எதையும் சேர்க்காத கட்சி மக்கள் விடுதலை முன்னணி என அவர் தெரிவித்தார்.

### "வோக்ஸ்வேகன்"...

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ஜனாதிபதி சிரேஷ்ட ஆலோசகர் சட்டத்தரணி அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். குளியாப்பிட்டியவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று (16) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

திறந்து வைக்கப்படவுள்ள வோக்ஸ்வேகன் தொழிற்சாலையானது, தெற்காசியாவிலேயே மிகப்பெரிய தொழிற்சாலையாக அமையவுள்ளது.

வெஸ்டன் ஓட்டோமொபைல் இன்ஸ்டிடியூட் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும், வோக்ஸ்வேகன் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட பல வாகனங்களும் நாளை காட்சிப்படுத்தப்படவுள்ளன . தற்போது இந்த தொழிற்சாலையில் தினமும் உதிரிப்பாகங்களைக் கொண்டு 25 வாகனங்கள் தயாரிக்கப்படுகின்றன. கார்கள் மட்டுமின்றி வேன்கள், டபள் கேப்கள் போன்ற பல்வேறு வாகனங்களும் இங்கு உருவாக்கப்படுகின்றமை குற்பிடத்தக்கது.

### ஜனாதிபதி ரணிலின் வெற்றி...

செயலாளருக்கும் அறிவித்துள்ளார். குறித்த பதாகைகள், கட் அவுட்கள் மற்றும் சுவரொட்டிகளை அகற்றுவதற்கு ஹோமாகம உள்ளூராட்சி மன்றம் மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு பொலிஸ் மற்றும் பிரதேச செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

### அடுத்த வருடம் முதல்...

நடத்தப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, ஜனவரி 20ஆம் திகதி, முதல் தவணை ஆரம்பமாகவுள்ளதாகவும், மாணவர்களுக்கான சீருடை மற்றும் பாடப்புத்தகம் என அனைத்தும் தயாராகிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இதனை தெரிவித்த கல்வி அமைச்சர், உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் நவம்பர் மாதம் 25ஆம் திகதி ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் கல்விப் பொதுத் தராதர பரீட்சை பெறுபேறுகளும் இன்னும் இரு வாரங்களில் வெளியிடப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்தார்.

# வியாகுல அன்னையின் ஏழு வியாகுலங்கள்

## செப்டம்பர் 15 வியாகுல அன்னை திருவிழா

செப்டம்பர் மாதம் வியாகுல அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதமாகும்

அக்காலத்தில் புளோரன்ஸ் நகரைச் சேர்ந்த ஏழு வணிகர்களுக்கு அன்னை மரியாள் தனித்தனியே காட்சி தந்து செனாரியோ என்ற மலைக்கு வரும்படி அழைத்தார் . அங்கே ஒன்று கூடிய எழுவரும் ஜெபிப்பதையும், வியாகுலங்களின் பக்தியைப் பரப்புவதையும் , மக்களைப் பாவம் , தீமையிலிருந்து விடுவிப்பதையும் தங்களது முதற்கடமையாகக் கொண்டிருந்தனர்

அவர்களது வாழ்வு ஊழியக்காரியாகிய மரியன்னைக்கு ஊழியம் புரிவதாக இருந்ததால் அன்னை தாமே வெளிப்படுத்திய "மரியின் ஊழியர் " என்ற பெயரையே தமதாக்கிக் கொண்டனர்.

வியாகுல அன்னை 2000 ஆண்டுகளுக்கு முன் இயேசுவின் சிலுவையருகில் நின்று இயேசுவின் துன்பத்தில் பங்கேற்றார். இன்றைய நவீன கால சிலுவைகளாகிய வறுமை, நோய், அறியாமை, வன்முறை, அடக்குமுறை, இயற்கையை அழித்தல் , பண்பாட்டுச் சீரழிவு, தேவையற்ற கலாச்சார மாற்றம் போன்ற சிலுவைகளில் அன்றாடம் மக்கள் அறையப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

எனவே இத்தகைய சிலுவைகளிலிருந்து மக்களை மீட்க ஒவ்வொருவரும் உறுதியெடுப்பதே வீரத்தாயாம் வியாகுல அன்னைக்கு நாம் செய்யும் நன்றி வழிபாடாகும்.



நம் அன்னை தன் அன்பு மகனின் பிறப்பு முதல் இறப்பு வரை எண்ணற்ற துன்பங்களை அனுபவித்தார்கள். துணை மீட்பராக விளங்கிய நம் தாய் தன் மகனின் பாடுகளில் தனது மாசுமருவற்ற தூய இருதயத்தை அடித்து நொறுக்கி செயலிழக்க செய்வது போன்ற வேதனையை அனுபவித்தார்.



இவ்வாறு ஆண்டவரின் வார்த்தைக்கு 'ஆகட்டும்' என, தன்னைக் கையளித்த நாள் முதல் நம் தாய் அனுபவித்த வியாகுலங்கள் பற்பல. என்றாலும் நம் தாயாம் திருச்சபை அவற்றில் ஏழு வியாகுலங்களைப் பற்றி தியானிக்க அழைக்கிறது

**முதல் வியாகுலம்**
**சிமியோனின் இறைவாக்கு**
**(லூக் 2: 25 முதல் 35)**

இந்த முதல் வியாகுலத்தில் அன்னை மரியாள் தன் குழந்தையை யூத பாரம்பரியப்படி கோவிலில் காணிக்கையாகக் கொண்டு செல்கிறார் .அங்கே பல ஆண்டுகளாக வாக்களிக்கப்பட்ட மீட்பராகிய மெசியாவின் வருகைக்காகக் காத்திருந்த முதியவர் குழந்தையைக் கையில் எடுத்து " இதோ இக்குழந்தை பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாகத் திகழும் ; எதிர்க்கப்படும் அடையாளமாகவும் விளங்கும் " என்றார் . மேலும் அதன் தாயாகிய மரியாவைப் பார்த்து " உமது இதயத்தை ஒரு வாள் ஊடுருவும் " என்றார்.

என்ன ஒரு கொடுமையான வாழ்த்து! இதுவரை எந்தத் தாயும் தன் மகனைப் பற்றி முதன் முதலில் கேட்டிராத வாழ்த்து இது . இன்று குழ்ந்தை பிறந்தவுடன், கூடும் உறவுகள், உன் மகன் நன்கு படிப்பான், பெரிய ஆளாக வருவான், உன் குடும்பப் பெயரை சிறக்கச் செய்வான் என்பன போன்ற வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் சூழலில் இப்படியும் ஒரு வாழ்த்து . இறைவனால் வாக்களிக்கப்பட்ட தன் மகனுக்கும் , அவனால் தனக்கும் நேர இருக்கும் கொடுமையை அறிந்தும் பதறவில்லை நம் தாய் . காரணம், எல்லாம் இறைத் திருவுளம் என்று ஏற்கும் மனப்பக்குவம்.

**இரண்டாம் வியாகுலம்**
**குழந்தையுடன் எகிப்துக்கு தப்பி ஓடுதல்**
**(மத் 2:13,14 )**

இரண்டாம் வியாகுலத்தில் நம் தாய் மரியாள், தன் மகன் இயேசுவைக் கொல்லத் திட்டமிட்ட ஏரோதுக்குப் பயந்து, வானவரின் வழிகாட்டுதலின் பேரில் எகிப்துக்குத் தப்பியோடி அங்கே இருக்கின்றார் . எங்கும் இருள் , தெரியாத முகம், அறியாத மொழி, புரியாத கலாச்சாரம் என எல்லாமே புதிது

உணவுக்கு என்ன வழி புரியவில்லை . தங்க இடத்திற்கு என்ன செய்வது தெரியவில்லை . யாரிடம் உதவி கேட்பது என எதுவுமே தெரியாதவர்களாய் , முன்பு தன் இனத்து மக்களை தன் வீட்டு மாட்டிலும் கேவலமாக நடத்திய மக்கள் மத்தியில் வாழ்ந்து அனுபவப்படுகின்றார் . யூத மக்களின் அடிமை வீடு என அழைக்கப்பட்ட எகிப்தில் யூத மக்களுக்கு உரிமை வாழ்வை அளிக்க கடவுளால் கொடுக்கப்பட்ட மகன் வருகிறார் .

**மூன்றாம் வியாகுலம்**
**மூன்று நாள் இயேசு காணாமல் போதல்**
**(லூக் 2: 43,44)**

திருவிழாக் காலங்களில் குழந்தைகள் தாய் தந்தையை விட்டுப் பிரிந்து செல்வதும் பின்னர் நீண்ட தேடலுக்குப் பின் பிள்ளைகளைக் கண்டடைந்து மகிழ்ச்சி கொள்வதும் நம் அனுபவத்தை ஒத்தது .இதோ இங்கே ஒவ்வோர் யூதக் குழந்தையும் 12 வயதில் எருசலேம் ஆலயம் சென்று காணிக்கை செலுத்தி மறைநூலை வாசிக்கும் தகுதி பெறுகின்றனர்

இந்த மதச் சடங்கை நிறைவேற்றவே இயேசுவின் பெற்றோர் இயேசுவைக் கோவிலுக்கு அழைத்து வந்தனர் . சடங்குகள் முடிந்து வீட்டுக்குச் செல்ல முற்படும்போது இயேசுவைக் காணவில்லை .

"கடவுள் வாக்களித்த திருமகன்
உலகை மீட்க வந்த இரட்சகன்
தூய ஆவியால் பிறந்த திருமகனை "

காணாமல் போக விட்டுவிட்டேனே என்ற குற்ற உணர்வு ஒரு புறம், பிள்ளைப் பாசம் மறுபுறமுமாக பிரிந்த மகன் கிடைப்பானா என்ற ஏக்கத்தோடு கண்ணில் படும் குழந்தைகள் அனைத்தும் தன் மகனோ என்ற பிரமை, குழப்பத்தோடு நம் தாய்.

**அருட்சகோதரி ஜெபமணி**

**நான்காம் வியாகுலம்**
**இயேசு சிலுவை சுமந்து செல்லுதல்**
**(லூக் 23:27)**

இந்தக் கொடூரச் செயலைக் கன்னுற்ற நம் தாய் எங்கோ, யாருக்கோ கிடைக்க வேண்டிய தண்டனை இன்று தன் ஒரே மகனுக்கு, குற்றமற்றவருக்குக் கிடைத்திருப்பதைக் கண்டு வருத்தம் மேலிட பரிதவித்து நிற்கிறார். இது அன்னையின் மனதை உடைத்து நொறுக்குவது போன்ற வேதனையைத் தந்தது.

30 ஆண்டுகளாக கண்ணுக்குள் கண்ணாகப் பொத்திப் பொத்தி வளர்த்த மகன் இந்த மூன்று ஆண்டுப் பணி வாழ்வால் , விரோதியாக, வேண்டாதவராக , எதிர்க்கப்பட வேண்டியவராக , ஒழித்துக் கட்டப்பட வேண்டியவராகப் பார்க்கப்படுவதைக் கண்டு குமுறுகிறது அன்னையின் உள்ளம்

**"ஐந்தாம் வியாகுலம்**
**இயேசுவின் சிலுவை அடியில் அன்னை**
(யோவா 19:41,42)

“முதலும் முடிவுமானவர் , இருக்கின்றவராய் இருக்கின்றவர் நானே”

என்று கூறிய இறை மகன் மூன்று ஆணிகளுக்கு மத்தியில் முடக்கப்பட்டு இறப்பதைக் காண்கிறார் மரியாள். இறுதியாகத் தன்னிடம் கொடுக்க ஒன்றுமில்லை என்ற நிலையில் தன் தாயை வாரிக் கொடுக்கிறார் இயேசு .

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தையை இறுதிவரைக் காத்த இயேசு இந்த நேரத்திலும் தன் தாயை அவர்களுக்குத் தாயாக , சிறந்த வழிகாட்டியாக ,"அம்மா , இவர்களைக் கவனித்துக் கொள் " என்ற அர்த்தத்தில் "இதோ உம் மக்கள் " என்கிறார்

**ஆறாம் வியாகுலம்**
**மாதாவின் மடியில் மரித்த மகன்**
**(யோவா 19:40)**

தாலாட்டி வளர்த்த தங்க மகன் சீராட்டி வளர்த்த சிறந்த மகன் பாராட்டி வளர்த்த பாச மகனின் உடல் உயிரற்றுக் கிடப்பதை உற்று நோக்கி மடியில் தாங்கி இருக்கும் அன்னையின் மனத்துயர்.

சிறு குழந்தையாய் இயேசு இருந்த போது தூங்க வைப்பதற்காகத் தாங்கிய மடி இன்று தாங்குகிறது 33 வயது இளைஞனின் உயிரற்ற உடலை .

" அம்மா, என் பணியை முடித்து விட்டேன், செல்லவா?" என்று கேட்பது போன்ற உணர்வு அன்னைக்கு. உள்ளம் நோருங்குண்டவராக இனி யாருக்காக வாழ வேண்டும் , எனக்கென்று யார் இருக்கிறார்கள் எனப் பற்பல கேள்விகள் உள்ளத்தைக் குத்த மௌனியாகிப் போனார் அன்று எருசலேம் ஆலயத்தில் உன் உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும் என்று சீமோன் சொன்னாரே ; அந்த அம்பு இத்தகைய கொடுமையானதாக இருக்கும் என நான் நினைக்கவில்லை எனத் திகில் கொண்டார் அன்னை.

**ஏழாம் வியாகுலம்**
**இயேசுவின் அடக்கத்தின் பின் அன்னை அனுபவித்த துயரம்**
**(யோவா 19:41,42)**

இல்லாமை இயலாமை ஆக அனைத்திலும் பெரிய கொடுமை தனிமை ' எனக்கென்று யாருமில்லை சொந்தம் என்று சொல்ல ஒருவரும் இல்லை என் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள ஆளில்லை ' என்ற தனிமைத் துயரை ஒரு நேரமாவது அனுபவித்தவர்கள் மட்டுமே அன்னையின் இந்த ஏழாம் வியாகுலத்தைப் புரிந்து கொள்ள இயலும்




# வாழ்வின் மறுபக்கமே சிலுவை

## திருச்சிலுவை மகிமைப் பெருவிழா

கத்தோலிக்கத் திருச்சபை இம்மாதம் 14ஆம் திகதி திருச்சிலுவை பெருவிழாவை கொண்டாடியது. சிலுவை அனைவரது வாழ்விலும் இன்றியமையாத ஒன்றாகி விட்டது.

நாம் அருவருப்பான ஒன்றைப் பார்த்தால் 'ஹாரிப்ல்' என்கிறோம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் உரோமையர்கள் 'எக்ஸ் க்ருசே' ('சிலுவையிலிருந்து') என்பார்கள். மனிதர்கள் பார்வையில் அருவருப்பான ஒன்றை தற்போது நாம் மகிமையின் சின்னமாகக் கொண்டாடுகிறோம்.



சிலுவை நம் வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்று. எங்கு பார்த்தாலும் சிலுவை நம் கண்முன் நிற்கிறது.

கணிதத்தில் க்ரொஸ் என்பது கூட்டல் அல்லது பெருக்கல் அல்ஜிப்ராவில் க்ரொஸ் என்பது வெறுமை.

ட்ரொபிக்கில் க்ரொஸ் என்றால் அம்புலன்ஸ்.

பற்றரியிலும், இரத்த வகையிலும் க்ரொஸ் என்பது பொஸிட்டிவ்.

அடையாளங்களில் க்ரொஸ் என்றால் 'தடை செய்யப்பட்டது' என்பது.

இப்படி திரும்பும் எல்லாப் பக்கமும் தெரியும் க்ரொஸ் நமக்குச் சொல்வது என்ன?

'சிலுவை' என்றால் 'வாழ்வின் அடுத்த பக்கம்.'என்பதே.

இளமையிலிருந்து பார்க்கும் அதன் அடுத்த பக்கம் முதுமை சிலுவை.

பிறப்பின் சிலுவை இறப்பு.

விருப்பின் சிலுவை வெறுப்பு.

உடல்நலத்தின் சிலுவை நோய்.

நாம் ஒன்றை எடுக்கும்போதே அதன் அடுத்த பக்கமும் வருகிறதே. அந்த அடுத்த பக்கம்தான் சிலுவை.

ஒரு புத்தகத்தின் முதல் பக்கத்தை திறக்கும் நாம் அதன் கடைசிப் பக்கத்தில் அதை மூடித்தான் வைக்க வேண்டும். திரைப்படத்தின் தொடக்கத்தைப் பார்க்கும் நாம் அதன் முடிவையும் பார்க்க வேண்டும். ஒன்றைத் தொடங்கும்போது அதன் முடிவும் நம் முன் வந்து விடுகிறது. அந்த அடுத்த பக்கம் தான் சிலுவை.

சிலுவை என்றால் நம் நொறுங்குநிலை.

சிலுவை என்றால் நம் உறுதியில்லாத நிலை.

சிலுவை என்றால் நம் உடையும்நிலை.

சிலுவையை நோக்கிய நம் பார்வையை மூன்று நிலைகளில் விவிலியம் பதிவு செய்கிறது:

1) 'இந்தச் சிலுவை உமக்கு வேண்டாம்' என இயேசுவிடம் சொல்கிறார் பேதுரு.

சில நேரங்களில் நாமும் சிலுவை வேண்டாம் என நினைக்கிறோம். ஆனால் இது எதார்த்தம் அல்ல.

2) 'இறைமகன் என்றால் சிலுவையிலிருந்து இறங்கும்' என்கின்றனர் வழிப்போக்கர்கள்.

இந்நிலையில் நாம் சிலுவையிலிருந்து பாதியிலிருந்து ஓடிவிட நினைக்கிறோம்.

3) 'நீர் அரசுரிமை பெற்று வரும்போது என்னை நினைவு கூறும்' என்கிறார் நல்ல கள்வன்.

இவர்தான் சிலுவையை சரியாகப் புரிந்தவர். சிலுவையை அரியணையாகவும், இயேசுவை அரசராகவும், அவரின் முள்முடியை அரச கிரீடமாகவும், கையின் ஆணிகளை ஆயுதங்களாகவும் பார்க்க இவரால் மட்டுமே முடிந்தது.ஆக, சிலுவையின் மறுபக்கத்தைப் பார்க்க வைத்தவர் இவரே.

அந்த வகையில் வாழ்வின் மறுபக்கம்தான் சிலுவை என்பதை நாம் மறந்து வாழ்ந்து விட முடியாது.

**எல். ஜொனதன்**

# நம்பிக்கை செயல் வடிவம் பெற வேண்டியது அவசியம்

மனிதன் மாண்புடன் படைக்கப்பட்டவன். இயற்கையிலேயே மதிப்புடன் படைக்கப்பட்டாலும் பணம், பதவி, பட்டம் போன்ற அணிகலன்கள் இருந்தால் மட்டுமே தான் மதிப்புடன் வாழ்வதாக ஒரு மாய எண்ணம் அவனுக்குள் விதைக்கப்பட்டு, அது வளர்ந்து, விழுது விட்டு பரந்து கிடக்கிறது.



இந்த மதிப்புடன் வாழ்தல் என்பதில் துன்பங்களோ , துயரங்களோ, கஷ்டங்களோ இருக்கக் கூடாது என்று நினைக்கிறான். ஏன் இயற்கையான சாவு கூட அவனுக்கு அருகில் வராமல் இருக்க வேண்டும் என்று எண்ணற்ற விதத்தில் போராடுகிறான். இங்ஙனம், மலர்ப் பாதை மட்டுமே வாழ்க்கைப் பாதையாக இருக்க வேண்டும் என்பது மனிதரின் சிந்தனையாகவும், அதுவே மனிதருக்கு ஏற்றவையாகவும் இருக்கிறது.

ஒரு சொல்லால் எல்லாவற்றையும் படைத்தவர், ஒரே மகனை மீட்பிற்காய் தந்தவர், நாம் ஒன்றுபட்டு வாழ்வதில் பெருமகிழ்ச்சியும் கொள்கிற கடவுள், எல்லாவற்றையும் கடந்த அவர் துன்பத்தைத் தன் அக வாழ்வின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டார். தன் ஒரே மகனை பாடுகள் பட அனுமதித்தார்.

சிலை செதுக்கப்படும்போது உளிக்கு வலிக்கும் என்று செதுக்குபவன் நினைப்பானா? பாறைக்குச் சேதம் ஏற்படுகின்றது என செதுக்காமல் இருப்பானா? கை வலிக்கிறது என எடுத்த வேலையை நிறுத்துவானா? சிற்பியின் கை வலி, உளியின் வெப்பம், பாறையின் சிதைவு இவை அனைத்தின் காரணமாக உருவாகும் அற்புதமே பார்ப்போர் வியக்கும் அற்புதச் சிலைகள். சிரமங்களும், துன்பங்களும், தடைகளும் பிரபஞ்சத்தின் உருவாக்கத்தில், வளர்ச்சியில் இன்றியமையாத காரணிகள். இதை உணர்கின்ற மனிதன் வளர்ச்சிப் பாதையில் இருக்கிறான்.

படைக்கப்பட்டவை அதன் மாண்பிலிருந்து விலகியதை மீட்பதற்காகவே வந்த இறைமகன் சுமைகளைத் தன் மேல் ஏற்றுக் கொள்ளத் தயாரானார். நான் கிளர்ந்தெழவில்லை : விலகிச் செல்லவுமில்லை. என்னை அடிப்போர்க்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோர்க்கு என் தாடையையும் ஒப்புவித்தேன். நிந்தனை செய்வோர்க்கும் காறி உமிழ்வோர்க்கும் என் முகத்தை மறைக்கவில்லை என்ற எசாயாவின் வார்த்தை இதை வெளிப்படுத்துகின்றன.

மானிட மகன் பலவாறு துன்பப்படவும், மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும் மூன்று நாட்களுக்குப்பின் உயிர்த்தெழவும் வேண்டும் என்ற இயேசுவின் வார்த்தைகள் மெய்யாகிறது (மத் 16:21).

இயேசுவில் நம்பிக்கையும், அவர்தம் பாடுகள் வழியாக நம்மை மீட்கிறார் என்பதில் விசுவாசமும் கொண்டுள்ள இறைமக்களின் செயல்பாடுகள் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? நம்முடைய நம்பிக்கை செயல் வடிவம் பெற வேண்டும்.

குறிப்பாக சமூகத்தின் விளிம்பிலும், ஒடுக்கப்பட்ட நிலையிலும் இருந்துகொண்டு துன்பமே வாழ்வின் பாதை, துயரமே அனுதின அனுபவம் என்று வாழ்கின்ற மக்களிடத்தில் வார்த்தையை மட்டுமல்ல, நம் தலைவராம், மீட்பராம் இயேசுவைப் போல நம் செயல்பாடுகளின் வழியாக அவர்களின் வாழ்வில் மாறுதலைக் கொணர முற்படுவோம்.

தான் என்று வாழ்கிறவர் மண்ணோடு மண்ணாகிப் போவர். அதே நேரத்தில் பிறர் நலச் சிந்தனையோடு வாழ்பவர், பிறரின் துன்பத்தில் பங்கேற்பவர், என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக் கொள்வார் (மத் 10 : 39) என்ற ஆண்டவரின் வார்த்தையை வாழ்வாக்குவர். வாழ்வோம், வாழ்விப்போம்.

**அருட்பணி முனைவர் ம.அருள்**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 01ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 13

## குறள் தரும் சிந்தனை



ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு

மனத்தில் பொறாமையில்லாமல் வாழும் இயல்பை ஒழுக்கத்திற்குரிய நெறியாகப் பெற்று விளங்கிட வேண்டும்.

# ஐ.எம்.எப் நிறுவன பணிப்பாளர் வெளியிட்ட தூரநோக்குக் கருத்து!

இரு வருட காலத்துக்கு முன்னர் ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கைத் தேசம் இன்றுமே முழுமையாக விடுபடவில்லை. கடுமையாக பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதென்பது இலகுவான காரியமல்ல. அவ்வாறு மீண்டெழுவதற்கு மேலும் சில வருடங்கள் தேவையாகின்றன.

உலகில் மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான சில நாடுகள் மீண்டெழுவதற்கு பத்து வருட காலம் தேவையாக இருந்தது. அதேநேரம் சில நாடுகள் இன்னுமே மீண்டெழாமல் வறுமையில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால் வரலாறு சந்தித்திருக்காத மிகமோசமான பொருளாதார வீழ்ச்சியில் சிக்கியிருந்த எமது நாடு தற்போது மூச்சுவிடக் கூடியவாறு ஓரளவு மீண்டெழுந்திருக்கின்றது. இலங்கையானது இரு வருட காலத்தினுள் இத்தனை விரைவாக மீண்டுவிடுமென்று எவருமே கற்பனை செய்து பார்த்ததில்லை. இந்த அச்சம் காரணமாகவே இலங்கையில் இருந்து துறைசார் நிபுணர்கள் பலர் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தனர்.

ஆனால் இரண்டு வருட காலத்தில் எவருமே நினைத்துப் பார்த்திருக்காத அற்புதம் நிகழ்ந்துள்ளது. இலங்கையினால் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண முடியுமென்ற உத்தரவாதத்தை சர்வதேசம் தற்போது கொண்டுள்ளது. இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தில் நம்பிக்கை வைத்து உலக நாடுகள் இனிமேல் இலங்கைக்கு கடனுதவி வழங்க முடியுமென்று உறுதிப்படுத்தியிருக்கின்றன.

இலங்கையின் பொருளாதார மீள்ச்சிக்கு வழிவகுத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதில் சர்வதேச ரீதியில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இருவருட காலத்துக்கு முன்னர் எமது நாடு அரசியல் நெருக்கடியினாலும் பொருளாதார வீழ்ச்சியினாலும் அல்லலுற்ற வேளையில், நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்க எவருமே முன்வரவில்லை.

நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்குமாறு எதிரணித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும், அவர்கள் அத்தனை பேருமே தயங்கியவாறு ஒதுங்கிக் கொண்டனர். மூழ்கிக் கொண்டிருக்கின்ற கப்பலில் பயணம் செய்ய முடியாதென்பதுதான் அந்தத் தயக்கத்துக்குக் காரணமாகும்.

ஆனாலும் இலங்கைத் தேசத்தை மீட்டெடுக்க முடியுமென்ற துணிச்சலான நம்பிக்கையுடன் நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார். அக்காலப் பகுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி தொடர்பாக எதிரும்புதிருமான கருத்துகள் நிலவின. ஐ.எம்.எப் உதவி பெறுவதை ஒரு தரப்பினர் எதிர்த்தனர். மற்றொரு தரப்பினரோ ஐ.எம்.எப் உதவியின்றி இலங்கையினால் மீட்சிபெற முடியாதெனத் தெரிவித்தனர். ஐ.எம்.எப் உதவியை நாடுகின்ற வழிமுறைகள் புரியாமல் மௌனமாகவிருந்த அரசியல்வாதிகளும் அப்போது இருந்தனர்.

இவ்வாறான நிலையில் ஐ.எம்.எப் உதவியை இலங்கை பெற்றுக் கொள்வதற்கான வழிகளைத் திறந்து விட்டவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார். அவரது ஆற்றல், ஆளுமை, அனுபவம், நிர்வாகத்திறன், சர்வதேச செல்வாக்கு போன்றன காரணமாக ஐ.எம்.எப் உதவி சாத்தியமானது. இலங்கை இத்தனை விரைவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காண்பதற்குக் காரணம் ஐ.எம்.எப் உதவிகள் ஆகும்.

இலங்கை இத்தனை தூரம் முன்னேற்றமடைந்துள்ள போதிலும், ஐ.எம்.எப் உதவி அவசியமில்லையென்று கூறுகின்ற எதிரணி அரசியல்வாதிகளும் இப்போது இல்லாமலில்லை. அதேவேளை ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் தாங்கள் ஆட்சிக்கு வந்தால், ஐ.எம்.எப் உடனான ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யவிருப்பதாக அபத்தமாகக் கூறிகின்ற எதிரணி அரசியல்வாதிகளும் உள்ளனர். சர்வதேசரீதியிலான மாபெரும் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை இத்தனை துரும்பாக எண்ணுகின்ற பேதமைத்தனத்தை இன்றைய தேர்தல் காலத்தில் காண முடிகின்றது.

இலங்கை இன்னுமே பொருளாதார வீழ்ச்சியில் இருந்து முழுமையாக மீண்டெழாத நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜுலி கொசெக் (Julie Kozack) சமீபத்தில் தெரிவித்துள்ள கருத்து குறித்து இலங்கையர்கள் அனைவரும் நன்கு சிந்திக்க வேண்டியுள்ளது.

"இலங்கை இதுவரை பயணித்த பாதையில் பல முன்னேற்றங்களை அடைந்துள்ளது. ஆனாலும் நாடு இன்னும் பொருளாதார ஆபத்தில் இருந்து மீளவில்லை. சிரமங்களுக்கு மத்தியில் கிடைத்த வெற்றிகளைப் பாதுகாப்பது முக்கியம். அதனை எதிர்வரும் தேர்தலில் இலங்கை மக்கள் தீர்மானிக்க வேண்டும்" என்று ஜுலி கொசெக் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"மூன்றாவது மீளாய்வுக்கான காலம் குறித்து தேர்தலுக்குப் பின்னர் அரசாங்கத்துடன் கலந்துரையாடப்படும். எனவே, ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த பின்னர், புதிய அரசாங்கம் அல்லது இலங்கை மக்கள் செய்கின்ற தெரிவின் அடிப்படையில், வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்களைத் தொடர எதிர்பார்க்கிறோம். அதன்படி செயல்பட நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.எம்.எப் குறித்தும், நாட்டின் பொருளாதாரம் தொடர்பாகவும் எதிரணி வேட்பாளர்கள் சாத்தியமற்ற வாக்குறுதிகளை அள்ளிவீசுகின்ற இக்காலத்தில், ஜுலி கொசெக் கூறியுள்ள கருத்து தொடர்பாக மக்கள் அவதானம் கொள்வது அவசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

# பிரஜைகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தெளிவுறுத்தும் செயலமர்வு நிந்தவூரில்



கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் பிரஜைகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தெளிவுறுத்தும் அம்பாறை மாவட்டத்திற்கான செயலமர்வு மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புகாரி முஹமட் தலைமையில் நேற்றுமுன்தினம் நிந்தவூர் பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பங்குபற்றுனர்களாக உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கிராம மட்ட அபிவிருத்தித் தலைவர்கள், இளைஞர், யுவதிகள் மற்றும் மதத்தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வளவாளராக எம்.புகாரி, திட்ட முகாமையாளர் ரேணுகா, கிழக்கு மையத்தின் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பான முறையில் விரிவுரை வழங்கினார். இதன் போது பிரஜைகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் பிரதிநிதிகள் அங்குள்ளோருக்கு வழங்கப் பட்டன.

**எம்.எப்.நவாஸ்...**
*(திராய்க்கேணி தினகரன் நிருபர்)*




பழைய ஆலயத்தை புனரமைத்து அமைக்கப்பட்ட புதிய ஆலயத்தின் தோற்றம்

# அக்கரைப்பற்று மெதடிஸ்த தேவாலயத்தின் 90 ஆவது வருட நிறைவு வழிபாடு இன்று

அக்கரைப்பற்று மெதடிஸ்த தேவாலயமானது இன்று 2024.09.17 (செவ்வாய்க்கிழமை) 90 ஆவது ஆண்டை நிறைவு செய்கின்றது. அக்கரைப்பற்று மெதடிஸ்த தேவாலய நிறைவுவழிபாடு இன்று 17 ஆம் திகதி காலை திருத்தலத்தில் இடம்பெறுகிறது.

இவ்வழிபாட்டில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு_கிழக்கு திருமாவட்ட அவைத் தலைவர் அருட்பணி சாம். சுபேந்திரன் அவர்கள் சிறப்பு இறைசெய்தி வழங்குகின்றார். அக்கரைப்பற்று மெதடிஸ்த தேவாலயமானது இங்கிலாந்திலிருந்து வருகை தந்த உவெஸ்லியன் பெண் மிஷனரி செல்வி கிளக் அம்மையாரின் தியாக இறைபணியின் அடையாளமாகும். இத்தேவாலயமானது அம்பாறை மாவட்டத்தில் மாத்திரமன்றி கிழக்கு மாகாணமெங்கும் பிரசித்தி பெற்று விளங்குகிறது.

**குழந்தைவேலு சற்குணானந்தன்...**
(அதிபர்)



## சர்வதேச எழுத்தறிவு தினம்:

# வாழைச்சேனை பொதுசன நூலகத்தில் மாணவர்களுக்கான போட்டி நிகழ்ச்சி

சர்வதேச எழுத்தறிவு தினத்தினை (செப்டெம்பர் 8) சிறப்பிக்கும் வண்ணம் வாழைச்சேனை பொதுசன நூலகத்தினால் மாணவர்களுக்கான போட்டி நிகழ்ச்சியும் பரிசளிப்பு விழாவும் நடத்தப் பட்டன.

கோறளைப்பற்று பிரதேசசபையின் கீழ் இயங்கும் வாழைச்சேனை பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச எழுத்தறிவு தினத்தினைச் சிறப்பிக்கும் வண்ணம் தரம்4 மாணவர்களுக்கான Spelling Master எனும் ஆங்கில எழுத்தறிவுப் போட்டி நடத்தப் பட்டது.

நூலகத்தின் அண்மையில் அமைந்துள்ள புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம், வாழைச்சேனை வை.அகமட் வித்தியாலயம், பிறைந்துரைச்சேனை அஸ்கர் வித்தியாலயம், விநாயகபுரம் விநாயகர் வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளைச் சேர்ந்த 16 மாணவர்கள் இந்த நேரடிப் போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்றினர்.



வாழைச்சேனை பொதுசன நூலகத்தின் பொறுப்பாளர் திருமதி த.தாரணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேசத்தினைச் சேர்ந்த ஆங்கில மற்றும் தமிழ் மொழி இலக்கியத் துறைகளில் செயற்பட்டு வருகின்ற இளந்தலைமுறை மொழி ஆர்வலர்களும் செயற்பாட்டாளர்களுமான அனுசதுர்த்திகா, தமிழூராள் அனுஸ்திக்கா, எம்.ஐ.எஃப்.இர்ஷானி ஆகியோர் நடுவர்களாக கலந்து போட்டி நிகழ்ச்சியினைச் சிறப்பாக நடத்தி முடித்தனர்.

போட்டிகள் மாணவர்களின் மத்தியில் நேரடியாக வாய்மொழி மூலமாக நடைபெற்று முடிந்த பின்னர் மூன்று சுற்றுக்களாக நடத்தப்பட்ட போட்டியில் அதிக புள்ளிகளைப் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டதுடன், போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சிறப்புப் பரிசுகளும் வழங்கப்பட்டன. கடந்த இரண்டு வருடங்களாக நடத்தப்படுகின்ற சர்வதேச எழுத்தறிவு தினப் போட்டி நிகழ்வுகளுக்கு புதுக்குடியிருப்பு வாழைச்சேனையைச் சேர்ந்த சதீஸ்குமார் பிரதீபா குடும்பத்தினர் அனுசரணை வழங்கி வருகின்றனர்.



**எஸ்.ஏ. ஸ்ரீதர்...**
*(வாழைச்சேனை தினகரன் நிருபர்)*

# பதுளை நகர் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக தலைக்கவசங்கள் வழங்கிவைப்பு

பதுளை நகரிலுள்ள பாடசாலைகளுக்கு தலைக்கவசம் அணியாமல் பெற்றோருடன் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் பிள்ளைகளுக்கு இலவச தலைக்கவசங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை காப்புறுதி நிறுவனமொன்று மேற்கொண்டுள்ளது.

பதுளை நகரிலுள்ள பாடசாலைகளுக்கு (ஹெல்மெட்) தலைக்கவசம் அணியாமல் பிள்ளைகளை அழைத்து வரும் பெற்றோர் தொடர்பில் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்படி காப்புறுதி நிறுவனத்தின் பிரதிநிதிகள் பதுளை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகளுடன் இணைந்து இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.



பாடசாலைக்கு ஹெல்மெட் அணியாமல் செல்லும் குழந்தைகளை பெற்றோருடன் நிறுவன அலுவலகத்திற்கு அழைத்து போக்குவரத்து தொடர்பான சட்டம் குறித்து விரிவுரையும், மோட்டார் சைக்கிள்களுக்கான இலவைச தலைக் கவசமும் வழங்கி வைத்தனர். இதன் போது, பதுளைபொலிஸ்போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் அனுர விதான போக்குவரத்து கொடர்பான விதிகள் குறித்து விரிவுரை மற்றும் தெளிவூட்டல் வழங்கினார்.

மோட்டார் சைக்கிளில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கான தலைக்கவசங்களை காப்புறுதி நிறுவனத்தின் பதுளை விற்பனை முகாமையாளர் அருண நிஷாந்த பெரேரா உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் வழங்கி வைத்தனர். 50 சிறுவர்களுக்கு தலைக்கவசங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

**எம்.ஏ.எம்.ஹசனார்...**

# கல்முனை பிராந்திய ஆய்வுகூடத்துக்கு சுகாதார அமைச்சினால் சிறப்பு விருது

கல்முனை பிராந்திய வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் எடுக்கப்படுகின்ற நோயாளர்களின் குருதி மற்றும் மாதிரிகளை பரிசோதனை செய்து, அதன் அறிக்கைகளை விரைவாகவும், உரிய நேரத்துக்கும் Online (Email, WhatsApp) மற்றும் குறுஞ் செய்தி ஊடாகவும் வழங்கி சிறந்த சேவையினை மேற்கொண்டுவரும் கல்முனை பிராந்திய மருத்துவ ஆய்வுகூடத்துக்கு சுகாதார அமைச்சினால் சிறப்பு விருது வழங்கப் பட்டுள்ளது.



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் பாலமுனை பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் பிராந்திய மருத்துவ ஆய்வுகூடமொன்று கடந்த வருடம் திறந்து வைக்கப்பட்டது.

உலக நோயாளர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சின் சுகாதார தரம் மற்றும் பாதுகாப்பு பணியகத்தினால் நடாத்தப்பட்ட தேசிய நிகழ்வு அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது. இந் நிகழ்வின் போதே கல்முனை பிராந்திய மருத்துவ ஆய்வுகூடத்துக்கு இந்த விருது வழங்ககப்பட்டது. இந்த நிகழ்வில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி டொக்டர் அலோகா சிங்கா, சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசல குணவர்த்தன, பிதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் லால் பனாப்பிட்டிய மற்றும் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய மருத்துவ ஆய்வுகூடத்தின் பொறுப்பதிகாரியும், பிராந்திய உயிரியல் மருத்துவப் பொறியியலாளருமான என்.எம்.இப்ஹாம் கலந்துகொண்டு குறித்த விருதினைப் பெற்றுக்கொண்டார்.

முன்னாள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் சிந்தனையில் உருவாக்கப்பட்ட குறித்த ஆய்வுகூடம் தற்போதைய பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் இயங்கி வருகின்றது.

**ஆதம்லெப்பை றியாஸ்...**
(பாலமுனை விசேட நிருபர்)

# பங்களாதேஷ் தொழிற்சாலை ஊழியர்களின் ஆர்ப்பாட்டம் செப். இறுதிவரை நீடிக்க வாய்ப்பு

## சர்வதேச கொள்வனவாளர்கள் இந்தியாவில் நாட்டம்

பங்களாதேஷின் டாக்கா பிரிவில் இடம்பெறும் தொழிற்சாலை ஊழியர்களின் ஆர்ப்பாட்டம் செப்டெம்பர் கடைசி வரை நீடிக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் நிலையில் வர்த்தகங்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.

அதிக சம்பளம் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே தொழிற்சாலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். செப்டெம்பர் ஆரம்பம் தொடக்கம் பெரும்பாலும் ஆடைத் தொழிற்சாலை உட்பட தொழிற்சாலை ஊழியர்கள் பல்வேறுபட்ட ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதோடு மருந்தியல் துறை பணியாளர்களும் பேரணிகளை நடத்தி வருகின்றனர். இந்த ஒன்றுகூடல்கள் பிரதான வர்த்தக வலயங்களில் இடம்பெற்று வருகின்றன.

இந்த அமைதியின்மை காரணமாக பல்வேறு வர்த்தகங்களும் மூடப்பட்டுள்ளன. அசுலியா பகுதியில் 219 ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதாக கடந்த செப்டெம்பர் 19 ஆம் திகதி செய்தி வெளியானது. தவிர வீதிகளை மறிப்பது மற்றும் பேரணிகளை நடத்துவது என பல்வேறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.



இதில் தொழிற்சாலைகள், அரச கட்டடங்கள், விளையாட்டு மைதானங்கள், பொது சதுக்கங்கள் மற்றும் பாதைகளிலும் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இதில் நூற்றுக் கணக்கானோர் பங்கேற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து நீடிக்கும் அமைதி இன்மை காரணமாக அரசு இராணுவத்தை சில பகுதிகளில் நிலைநிறுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

சட்டவிரோத ஒன்றுகூடல்களை கலைப்பதற்கு கண்ணீர்ப் புகைப் பிரயோகம், நீர் பீச்சியடிப்பது மற்றும் தடியடிப்பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைகளுக்கு சேதம் ஏற்படுத்துவது மற்றும் ஊழியர்கள் இடையே மோதல்கள் போன்ற சம்பவங்களும் ஆங்காங்கே இடம்பெறுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இந்த ஊழியர் அமைதி இன்மையால் சர்வதேச ஆடைக் கொள்வனவாளர்கள் பங்களாதேஷில் இருந்து இந்தியா பக்கம் அவதானம் செலுத்த ஆரம்பித்துள்ளனர்.

வெளித் தரப்புகளின் தூண்டுதலால் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக தொழிற்சாலை உரிமையாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதற்கு எதிராக அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கத் தவறி இருப்பதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். கடந்த பல நாட்களாக மூடப்பட்டிருந்த ஆடைத் தொழிற்சாலைகள் அண்மையில் திறக்கப்பட்டபோதும் இரண்டு நாட்களில் மீண்டும் மூடப்பட்டிருப்பதாகவும், இந்தப் பிரச்சினை காரணமாக வெளிநாட்டு ஆடை கொள்வனவாளர்கள் இந்திய ஆடை நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பங்களாதேஷின் ஆடை உற்பத்தித் துறையில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினை காரணமாக கடந்த இரண்டு வாரங்களுக்குள் மாத்திரம் சர்வதேச ஆடை கொள்வனவாளர்களின் இந்திய நாணயப்படி 4.50 பில்லியன் ரூபா கொள்வனவுக் கோரல்கள் இந்தியாவுக்குக் கிடைத்திருப்பதாக இந்தியாவின் 'எகொனமிக்ஸ் டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

**சர்வதேச செய்திகள்**

# பாகிஸ்தானில் மின்சார பிரச்சினை தொடர்ந்து நீடிப்பு



பாகிஸ்தான் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் ஜம்மு காஷ்மீர் பிராந்தியத்தில் நீடிக்கும் கடும் மின்சார நெருக்கடி காரணமாக மக்கள் ஆர்ப்பட்டங்களில் ஈடுபட்டு வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தொடர்ச்சியாக மின் விநியோகத்தை மேற்கொள்வதற்கு பிராந்திய அரசு தவறி இருப்பதாகவும், நாளொன்றுக்கு பல தடவைகள் மின்சாரம் துண்டிக்கப்படுவதால் மக்களின் அன்றாட வாழ்வு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் இந்தப் பிராந்திய மக்கள், அரச நிர்வாகத்தின் மீது கடும் விமர்சனத்தை வெளியிட்டு வருகின்றனர்.

தேவைக்கு ஏற்ப விநியோகத்தை மேற்கொள்ள முடியாத பெரும் பொருளாதார நெருங்கடியே பாகிஸ்தான் எங்கும் தற்போது இருக்கும் பெரும் மின்சாரத் தட்டுப்பாடுக்கு காரணம் என்று கூறப்படுகிறது. இதனால் மின்சார விநியோகத்தை மட்டுப்படுத்துவது மற்றும் அதிக மின்சார தேவை காரணமாக நாளொன்றுக்கு பல தடவைகள் மின்சாரம் துண்டிக்கப்படுவதாகவும் பிராந்திய மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் ஏனைய பிராந்தியங்கள் போன்று ஜம்மு காஷ்மீர் பிராந்தியத்திலும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு மத்திய அரசு கடந்த ஏப்ரல் மாதம் நடவடிக்கை எடுத்தபோதும், மே மாதத்தில் ஜம்மு காஷ்மீர் மக்கள் மின் கட்டணத்தை அதிகரித்ததற்கு எதிராக முன்னெடுத்த பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் காரணமாக மீண்டும் மீன்சாரக் கட்டணத்தில் திருத்தம் கொண்டுவருவதாற்கு அரசு நடவடிக்கை எடுத்தது.

### பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில்:

# வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றம்



பாகிஸ்தானில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பெரும்பாலான வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் அங்கிருந்து வெளியேறி வருவதாக செய்தி வெளியாகியுள்ளது.

தமது மூலோபாய திட்டங்கள் மற்றும் பொருளாதார முதலீடுகளுக்கு தொடர்ந்து பாகிஸ்தான் அரசினால் எந்த ஒரு முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்படாத நிலையில் வெளிநாட்டு வர்த்தக சமூகம் அரசு மீது பெரும் அதிருப்தியில் உள்ளதாக அந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுவாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் ஒரு நாட்டில் மேற்கொள்ளும்வர்த்தகக்கொடுக்கல்வாங்கல்கள் 15–20 ஆண்டுகள் வரை நீண்டகால திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றதோடு, அவ்வாறான நீண்டகால வர்த்தகத் திட்டமிடல்கள் பாகிஸ்தான் அரசுக்கு இல்லை என்பதால் நிலைமை மேலும் மோசமடைந்திருப்பதாக வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

கடந்த ஒகஸ்ட் மாதத்தின் முதல் 23 நாட்களுக்குள் மாத்திரம் வெளிநாட்டு முதலீடுகள் பாகிஸ்தான் ஒப்பந்தங்களில் இருந்து விலகி இருப்பதாகவும், அதன் பெறுமதி மில்லியன் கணக்கான அமெரிக்க டொலர்கள் என்றும் வெளிநாட்டு ஊடகங்கள் வெளியிட்டிருக்கும் செய்திகளில் கூறப்பட்டுள்ளன. பாகிஸ்தான் மத்திய வங்கியின் புள்ளிவிபரங்கள் அடிப்படையில் வெளிநாட்டு முதலீடுகளில் 103.5 மில்லியன் டொலர்கள் அந்நாட்டு திறைசேரி உண்டியல்களை அகற்றிக்கொண்டிருப்பதோடு, சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றங்கள் தற்போது கிடைக்கப்பெறாமை மற்றும் நாட்டில் தற்போது நிலவும் அரசியல் குழப்பம் காரணமாக அது ஏற்பட்டிருப்பதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

# பௌத்த மதகுருமாரையும் மக்களையும் இழிவுபடுத்தும் வகையில் பிரசாரங்கள்!

கடந்த 14 ஆம் திகதி குருநாகல் எத்துகல புத்தர்பெருமான் சிலைக்கு முன்பாக சுமார் ஆயிரம் பிக்குகள் ஒன்றுகூடி ஆசிர்வாத பிரசங்கம் ஒன்றை நடத்திய பின்னர், இன்றைய அரசியலில் எழுந்துள்ள பௌத்த விரோத நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சில தரப்பினரால் பௌத்த மதத்திற்கு எதிரான நடைமுறைகள் பின்பற்றப்படுவதாகவும், அவ்வாறான செயற்பாடுகளுக்கு பிக்குகள் இடமளிக்கத் தயாரில்லை எனவும் ஊடகங்களுக்கு பிக்குகள் கருத்துத் தெரிவித்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஏன் மகாசங்கத்தினர் இவ்வாறான தொரு எதிர்ப்பை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து ஆராய வேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் தம்மை புலம்பெயர்ந்தவர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டோர் சிலர் பௌத்த எதிர்ப்புப் பிரசாரத்தை முன்னெடுத்ததை பலரால் பார்க்க முடிந்தது. புத்தபெருமானை அவமதிக்கும் வகையில் புத்தகங்களும் பிரசுரங்களும் வெளியிடப்பட்டதுடன், சமூக ஊடகங்கள் ஊடாக பௌத்தத்திற்கு எதிரான பிரசுரங்களுடன் பிரசாரங்களும் மேற்கொள்ளப்பட்டன. இந்த புலம்பெயர்ந்தவர்களை விசாரித்தபோது, அவர்களில் பலர் பிற மதத்தினரா கவோ அல்லது மக்கள் விடுதலை முன்னணியோடு தொடர்புடையவர்களாகவோ இருந்தமை கண்டறியப்பட்டது. அவர்கள் பௌத்தம் ஆட்சிக்கு வருவது பிரதான தடையெனக் கருதினர். சிறுபான்மை மக்களுக்கும் பெரும்பான்மை மக்களுக்கும் இடையிலான உறவை உடைப்பதே அந்த அரசியல் கட்சியின் நோக்கமாகத் தெரிகிறது.

எதுகலயில் இடம்பெற்ற மேற்படி பிக்குகள் மாநாட்டில், தேசிய மக்கள் சக்தியின் விஞ்ஞாபனத்தில் மதம் தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என பிக்குகள் வலியுறுத்தியுள்ளனர். இன்று இலங்கையில் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பு பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான மக்கள் பிரதிநிதிகளின் சம்மதத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியலமைப்பாகும். அதுவரை இருந்த குடியரசு அரசியலமைப்பில் 1978 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட தற்போதைய அரசியலமைப்பு நாட்டின் மதங்கள் மற்றும் அரசாங்கத்தின் பொறுப்பை தீர்மானித்துள்ளது.

1978 அரசியலமைப்பின் பிரகாரம், அரசாங்கம் பௌத்த மதத்தைப் பாதுகாத்து வளர்ப்பதுடன் ஏனைய மதங்களையும் சமமாக நடத்துவதாகக் கூறுகிறது. மதத்தின் இந்தக் கட்டளைகள் பெரும்பான்மையினரின் அதிகாரத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்படவில்லை. இலங்கையின் 2,500 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றில், பௌத்தம் அந்நியரின் ஆட்சிக்கு உட்பட்டதே தவிர, அரசாங்கத்தால் போஷிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. அரசாங்கத்திற்கும் பௌத்த மதத்திற்கும் இடையிலான உறவு எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதை உடரட ஒப்பந்தம் தெளிவுபடுத்துகிறது. பௌத்த மதத்தைப் பாதுகாத்து வளர்ப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என உடரட ஒப்பந்தம் கூறுகிறது. மறைத்து வைக்கப்பட்டிருந்த புனிதச் சின்னம் மீண்டும் தலதா மாளிகைக்கு கொண்டுவரப்பட்டு கண்டி தலதா பெரஹராவை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அனுசரணையையும் பாதுகாப்பையும் வழங்கியதன் மூலம் பிரிட்டிஷ் அரசாங்கம் அந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தொடங்கியது.

1978 அரசியலமைப்பில் மேற்படி பௌத்தம் தொடர்பான ஷரத்தை உள்ளடக்கியமை ஏனைய மதங்களின்அந்தஸ்தைக்குறைப்பதாகவோ அல்லது அவர்களுக்குக் குறைவான மதிப்பளிப்பதாகவோ அர்த்தமல்ல. அவர்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் அதே ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மறுபுறம், அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளின்படி இனம், மதம், மொழி அல்லது சாதி போன்ற காரணிகளின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அடிப்படையாகக் கொண்ட பாகுபாடு தண்டனைக்குரியது. பௌத்தத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான உறவும் இந்த அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முதலாளித்துவத்திற்கு உதவுகின்ற சக்தி மதம் என்று மார்க்சிசவாதம் கண்டித்துள்ளது. அந்தக் காரணத்திற்காகவே மார்க்சியப் பகுப்பாய்வில் மதம் அபின் என கருதி அறிக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன. மார்க்சிச அரசியல் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியால் உருவாக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி மார்க்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மத விளக்கங்களை ஏற்றுக் கொள்வதில் பிரச்சினை இல்லை. ஆனால் பிரச்சினை என்னவென்றால், அந்த சக்தியின் மதம் பற்றிய கருத்து எல்லா மதங்களையும் பற்றியது அல்ல, ஆனால் அது பௌத்தத்திற்கு மட்டுமே எதிரானது என்று தோன்றுகிறது.

தலதா மாளிகை மீது மக்கள் விடுதலை முன்னணி எப்படி குண்டு வீசியது என்பது அனைவருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். அப்போது தலதா மாளிகையின் தியவதன நிலமேயான நெரஞ்சன் விஜேரத்ன, மக்கள் விடுதலை முன்னணியால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலின் நோக்கம் புனித சின்னத்தை கடத்துவதே என தெரிவித்திருந்தார். இந்தத் தாக்குதலால் தலதா மாளிகை வளாகத்திற்கு பெரும் சேதம் ஏற்பட்டது, ஆனால் அவர்களால் அதனை எடுத்துச் செல்லவோ அல்லது சேதப்படுத்தவோ முடியவில்லை.

இந்த நாட்களில் மக்கள் விடுதலை முன்னணியின் சில தலைவர்கள் பௌத்த மதம் குறித்து வெளியிட்ட சில கருத்துக்கள் சமூக வலைத்தளங்களில் தொடர்ந்து பகிரப்பட்டு வருகின்றன. அதில் ஒன்று சிலை வழிபாடு சிங்கள கலாசாரத்தின் ஒரு பகுதி, ஆனால் அது பழங்குடியின செயல் என்று தேசிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சுனில் ஹந்துன்நெத்தி கூறிய காணொளி உள்ளது. இது சிங்கள கலாசாரத்தின் சிறப்பம்சமாக இருந்தாலும் அது அர்த்தமற்ற செயல் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன் மற்றொரு தலைவரும் செய்தித் தொடர்பாளருமான நளின் ஹேவகே இதைவிட தீவிரமான கருத்தை வெளியிட்டுள்ளார். பௌத்தர்களின் முக்கிய பழக்கமான போதிமர(அரசமர) வழிபாட்டைக் கேலியும் கிண்டலும் செய்த அவர், புத்தபெருமான் தென்னை மரத்திற்கோ, பலா மரத்திற்கோ சென்று ஞானம் பெற்றிருந்தால், அத்தகைய மரங்களிலிருந்து பழங்களைப் பெறும் வாய்ப்பை இழந்திருப்பர் என்றும் கூறியுள்ளார். .

ஒருபுறம் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் பௌத்தத்தை எந்த வகையில் கண்டிக்கிறார்களோ அதே மாதிரியான கேடு அக்கட்சியுடன் இணைந்த, விசுவாசமுள்ள மக்களாலும் செய்யப்படுவது தெளிவாகிறது.

'புத்தரின் ரஸ்தியாதுவ' என்ற பௌத்த புத்தகம் அந்தக் கட்சியுடன் தொடர்புடைய ஒருவரால் எழுதப்பட்டது. அதே கட்சியைச் சேர்ந்த மற்றொருவர் புத்தரை இதேபோல் அவமதித்ததாக வழக்கு தொடரப்பட்டபோது, தன் தவறுக்கு மக்களிடம் மன்னிப்பு கேட்டார். அந்த நபரால் கூறப்பட்ட ஒரு அறிக்கை சமூக ஊடகங்களில் பரப்பப்படுகிறது.

அவரால் மிஹிந்தலை விகாராதிபதி தேரரும், கிரிபத்கொட ஞானானந்த தேரோவும் அவமதிக்கப்படுகிறார்கள்.


இந்த வகையில் தேசிய மக்கள் சக்தியின் பிரசாரத்தால் பௌத்த பிக்குகளுக்கும் பௌத்த மதத்திற்கும் இழைக்கப்பட்ட அவமானங்கள் அதிகம். பௌத்த மதத்தை இவ்வாறு நடத்தியவர்களுக்கு வரலாற்றில் கிடைக்க வேண்டிய இடம் எது என்பதை பொதுமக்கள் முடிவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது தெரிகிறது. 1956 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு முன்னதாக, அப்போது பிரதமராக இருந்த சேர் ஜோன் கொத்தலாவ, ஒழுக்கமில்லாத பிக்குகளின் முதுகில் தார் பூசி அவர்களை பௌத்ததிலிருந்து விரட்டுவேன் என்று அறிவித்தார். அந்தத் தேர்தலில் அவருக்கும் கட்சிக்கும் பொதுமக்கள் சரியான பதிலை அளித்திருந்தார்கள்.

சுதந்திரத்திற்குப் பின்னர் 1948 முதல் 1956 வரை நாட்டை ஆட்சி செய்த சேர் ஜோன் கொத்தலாவ அத்தேர்தலில் 08 ஆசனங்களை மட்டுமே பெற்றார். பௌத்தத்தை இழிவுபடுத்தும் கட்சிகளுக்கும் தலைவர்களுக்கும் பொதுமக்கள் இப்படித்தான் பதிலளித்தனர். தேசிய மக்கள் சக்தியின் சில தலைவர்கள், அங்கத்தவர்கள், பின்பற்றுபவர்கள் மேற்கொள்ளும் பௌத்த விரோதச் செயற்பாடுகள் பெரிய விடயமாகக் கருதப்படுவதனால் இந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுமக்களும் அவ்வாறே பதிலளிப்பார்கள்.

*மக்கள் நேசன்*

# ஹட்டன் வலயத்தின் கல்விப் பணிப்பாளர் பழனிமுத்து ஸ்ரீதரன் சேவையிலிருந்து ஓய்வு

ஹட்டன் வலயத்தின் கல்விப் பணிப்பாளராகவிருந்த பழனிமுத்து ஸ்ரீதரன் தனது சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். புளியாவத்தை தோட்டத்தைச் சேர்ந்த பழனிமுத்து_ செல்லம்மாள் தம்பதியினரின் புதல்வராவார். தனது ஆரம்பக் கல்வியை புளியாவத்தை தமிழ் வித்தியாலயத்திலும் கற்ற இவர், இடைநிலை கல்வியையும் உயர்தரத்தில் வணிக கல்வியையும் முறையே ஹட்டன் பொஸ்கோ மற்றும் ஹைலன்ஸ் கல்லூரியிலும் கற்றார்.



1988.8.6 அன்று நோர்வூட் பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியராக முதல் நியமனம் பெற்றார். தொடர்ந்து 1990 களில் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் கணித பாட சிறப்பு பயிற்சினை பெற்றுக்கொண்டார். ஆசிரிய பயிற்சியினை நிறைவு செய்ததை தொடர்ந்து புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயத்தில் கணித பாட ஆசிரியராக கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

1992 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைகழகத்தில் கலைமாணி பட்டத்தை பெற்றுக் கொண்டதோடு தனது பட்டமேற் கல்வி டிப்ளோமாவை 1994 ஆம் ஆண்டு தேசிய கல்வி நிறுவகத்தில் பெற்றுக் கொண்டார். 2003 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலை கழகத்தில் ஆசிரிய கல்வியில் முதுமாணி பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார். 1997 ஆண்டு யதன்சைட் அரசினர் ஆசிரிய கலாசாலையில் முழுநேர விரிவுரியாளராக கடமையை பொறுப்பேற்றுக் கொண்டதோடு கணிதம்,உளவியல் ,ஆரம்ப கணிதம் பாடங்களுக்கு விரிவுரையாளராக பணியாற்றினார்.

தொடர்ந்து கொட்டகலை கொமர்சல் பகுதிக்கு கலாசாலை இடமாற்றம் பெற்றுபோது அங்கு கலாசாலையின் பிரதி அதிபராக பதவிஉயர்வை பெற்றுக்கொண்டார். 2000 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டதை தொடர்ந்து தனது தகுதியினை உயர்த்திக்கொண்டார்.அந்தவகையில் 2010 ஆம் ஆண்டு கல்வி நிர்வாக சேவையில் தரம் 2 யையும் தொடர்ந்து 2016 ஆம் ஆண்டு தரம் 1ல் கல்வி நிர்வாக சேவையில் பதவி உயர்வும் கிடைக்கப்பெற்றது.

(கினிகத்தேனை தினகரன் நிருபர்)...

# மாத்தளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய கும்பாபிஷேகம்





மாத்தளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேஸ்தான மகா கும்பாபிஷேக பெரு விழா ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (நாவலப்பிட்டி சுழற்சி, மாத்தளை நிருபர்கள்)

## ஜனாதிபதி தேர்தலுக்கு இரத்தினபுரி மாவட்டம் தயார் நிலையில் உள்ளதாக மாவட்ட செயலாளர் அறிவிப்பு

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

சீரற்ற காலநிலை நிலைமையின் கீழ் எந்தவித அனர்த்த நிலைமைக்கு முகம் கொடுத்து இரத்தினபுரி மாவட்டத்தில் தேர்தலை நடத்துவதற்கும் அளித்த வாக்குகளை கணக்கிடுவதற்கும் அனைத்து பணிகளும் தயார் நிலையில் உள்ளதாக இரத்தினபுரி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும் மற்றும் மாவட்ட செயலாளருமான வசந்த குனரத்ன தெரிவித்தார்.

மாவட்ட செயலக காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இந்த தகவலை அவர் வெளியிட்டார். பிரதி தேர்தல் ஆணையாளர் சுரங்க அம்பகதென்னவின் பங்களிப்பில் இந்த ஊடக சந்திப்பு இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன தெரிவித்ததாவது, சீரற்ற காலநிலை இரத்தினபுரி மாவட்டத்தில் இன்னும் குறைவடையாத நிலையில் உள்ளதாக தெரிவித்தார். மேலும் இப்பகுதியில் மழை தொடர்ந்தால் வெள்ள அபாயம் மற்றும் மண்சரிவு அபாயம் ஏற்படக்கூடிய நிலைமை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டிய மாவட்ட செயலாளர் எவ்வாறாயினும் தேர்தல் காலம் நெருங்கும் பொழுது காலநிலை சீரடையும் என தாம் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

எவ்வாராயினும் அனர்த்த நிலைமை ஏற்படும் பட்சத்தில் அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் எட்டு தேர்தல் தொகுதிகள் உள்ளதுடன் இந்த தொகுதிகளில் 923,736 வாக்காளர்கள் வாக்களிக்க பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் 700 வாக்களிப்பு மத்திய நிலையங்களில் இந்த வாக்காளர்களுக்கு வாக்களிக்க சகல ஒழுங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், 12,001 நபர்கள் தேர்தல் பணிக்காக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தேர்தல் பணிகளுக்காக பாதுகாப்பு நடவடிக்கையில் 2500 பொலிஸ் அதிகாரிகளும் மற்றும் சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் 325 பேரும் ஈடுபடவுள்ளதாக மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார். வாக்களிக்கும் பெட்டிகளை கொண்டு செல்வதற்கு இலங்கை போக்குவரத்து சபை 76 பஸ் வண்டிகளும் 20 தனியார் பஸ் வண்டிகளும் 265 தனியார் வேன் ரக வானங்களும் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அரச வாகனங்கள் 200, கொழும்பு மாவட்டத்திலிருந்து அரச வாகனங்கள் 14 இந்த பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

## மலைச்சாரல்

### அமரர் பிரேமதாச உயிரோடு இருந்திருந்தால் ரணில் விக்கிரமசிங்கவுக்கே வாக்களிப்பார்

முன்னாள் அமைச்சர் தலதா அதுகோரல

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

முன்னாள் ஜனாதிபதி அமரர் ஆர். பிரேமதாச இன்று உயிருடன் இருந்திருந்தால் அவரும் எங்களுடைய வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே வாக்களித்திருப்பார் என முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரல நேற்று ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் 1991 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி அமரர் ஆர். பிரேமதாசவுக்கு எதிரான குழுக்கள் அவரை பதவி கவிழ்க்க முயற்சித்தபோது அவரது பதவியை பாதுகாக்க ரணில் விக்கிரமசிங்க உதவி செய்தார்.அதே போன்று எங்களுக்கு அரசியலில் ஆரம்ப அறிவைக் கற்றுத் தந்தவர் ரணில் விக்கிரமசிங்க நாடு தீப்பற்றி எரிந்த சந்தர்ப்பத்தில் இருந்த பிரச்சினைகளை தீர்த்து எங்களுக்கு நிம்மதியாக உறங்கக்கூடிய வாழ்க்கையை ஏற்படுத்தி தந்தவருக்கு நாங்கள் நன்றி கெட்டவர்கள் ஆகக்கூடாது ஆகவே தான் நாட்டையும் நாட்டின் எதிர்காலத்தையும் எதிர்கால சந்ததியின் நல்ல எதிர்காலத்தையும் உறுதிப்படுத்தக் கூடிய திட்டங்களை முன்வைத்துள்ள ரணில் விக்கிரமசிங்கவை வெற்றியடையச் செய்ய முன்வந்தேன் எனவும் அவர் தெரிவித்தார்.

## நன்றி கடன் செலுத்த நல்ல சந்தர்ப்பம் ரணிலுக்கு வாக்களியுங்கள்

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவல

இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

நாட்டு மக்களுக்கு நன்றிக் கடன் செலுத்த நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. நெருக்கடி காலத்தில் பட்டினியில் இருந்து மீட்டு எம்மையும் எமது பிள்ளைகளையும் பாதுகாத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி செலுத்த எதிர்வரும் 21 ஆம் திகதி வாக்களிப்பதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது என இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவல நேற்று (16) தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். நாட்டின் எதிர்காலம் சம்பந்தமான தெளிவான திட்டங்கள் சிந்தனைகளை வைத்துள்ள ஜனாதிபதியை நாம் மீண்டும் தெரிவுசெய்யாமல் அனுபவம் வேலைத்திட்டங்கள் இல்லாதவர்களை நியமித்தால் நாடு மீண்டும்

அழிவை சந்திப்பதைத் தவிர்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

## மாத்தளையில் தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறிய 135 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளது

(மாத்தளை சுழற்சி நிருபர்)

மாத்தளை மாவட்டத்தில் தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறிய 135 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக மாத்தளை மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு பிரிவு காரியாலயம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்திய தினத்திலிருந்து நேற்று முன்தினம் 15 வரை இம்மாவட்டத்தில் தம்புள்ளை, மாத்தளை, ரத்தோட்ட, லக்கல ஆகிய பிரதேசங்களில் தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறிய சிறு சிறு சம்பவங்கள் பதிவாகியுள்ளது.சட்ட விரோதமாக சுவரொட்டி ஒட்டுதல், வேட்பாளர்களின் கட் அவுட் காட்சிப்படுத்தல் போன்ற சம்பவங்களே பல பதிவாகியுள்ளன.

இத்தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுர குமார திசாநாயக்க ஆகிய ஜனாதிபதி வேட்பாளர்களின் வெற்றிக்காக சட்டவிரோத துண்டு பிரசுரங்களை விநியோகித்து வருவதும் இதில் அடங்குகிறது.

## தமிழ் மொழியில்; பொலிஸில் முறைப்பாடு செய்ய, அரச திணைக்களங்களில் சேவைகளைப் பெற ஏற்பாடு

தே.ம.சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க

(அக்குறணை குறூப் நிருபர்)




இந்நாட்டு பொருளாதாரத்துக்கு மலையக மக்கள் பங்களிப்புக்களை வழங்கினர். அவர்களும் இலங்கை பிரஜைகள். இந்திய தமிழர்கள் அல்லர். பாராளுமன்றம் உறுப்பினர்களும் அமைச்சர்களும் மலையகத்திலிருந்து, தெரிவாகினாலும் இதுவரை மலையக மக்களின் அவலம் தீரவில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி சார்பில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும், அநுரகுமார திஸாநாயக்கவை ஆதரித்து, தலவாக்கலையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது; நாம் ஆட்சிக்கு வந்ததும் மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவோம். அவர்களுக்குரிய காணி உரிமை உட்பட சம உரிமைகள் பெற்றவர்களாக வாழ வழி சமைப்போம். மலையகத்திலிருந்து பலர் பாராளுமன்றம் சென்று, அமைச்சு பதவிகளையும் பெற்றுள்ளனர். ஆனால் மலையக மக்களின் துன்பம் இன்னும் மாறவில்லை. எனவே மாற்றம் ஒன்று வேண்டுமா என மலையக மக்கள் தீர்மானிக்க வேண்டும். மக்களுக்கு போலி உறுதிமொழிகளை வழங்கி வாக்குகள் பெறும் அரசியலே இன்று காணப்படுகிறது. தேர்தல் காலத்தில் உணவு, மது உள்ளிட்ட வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டு வாக்குகள் பெற முயற்சிக்கப்படுகிறது. இவ்வாறான நிலைமைகளுக்கு முடிவுகட்ட வேண்டும்.

வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு மக்கள் இன்று தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர். மலையக மக்களும் இதில் இணைய வேண்டும். எம்முடன் போட்டி இடும் ஏனைய வேட்பாளர்கள் எப்படிதான் உறுதிமொழிகள் வழங்கினாலும் எமது வெற்றியை திசை திருப்ப முடியாது. ஏமாற்று அரசியலை எம்மால்தான் தடுத்து நிறுத்த முடியும் என்பது இன்று நாட்டு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.இந்நாட்டு பொருளாதாரத்துக்கு மலையக மக்கள் பங்களிப்புக்களை வழங்கினர். அவர்களும் இலங்கை பிரஜைகள். இந்திய தமிழர்கள் அல்லர், எனவே, அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என தற்போது பேசிப் பயன் இல்லை.

பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை , வீட்டு உரிமை எதுவும் இன்று இல்லை. எமது ஆட்சியில் இவற்றுக்கு தீர்வு காணப்படும். பெருந்தோட்டப்பகுதியில் கல்விக் கட்டமைப்பு மேம்படுத்தப்படும். மலையகப் பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவது அவர்களது பெற்றோருக்கு இன்று பாரிய சுமையாக மாறியுள்ளது. அந்த சுமையை நாம் குறைப்போம். சிறந்த சுகாதாரத் துறையை பெருந்தோட்ட பகுதிகளில் கட்டியெழுப்புவோம்.

தமது சொந்த மொழியில் பொலிஸில் முறைப்பாடுகள் செய்யவும், அரச திணைக்களங்களில் தமிழ் மொழியில் சேவைகளை பெறக்கூடிய நிலையும் இருக்க வேண்டும். எமது ஆட்சியில் அந்த நிலைமை ஏற்படும். இந்நிலைமை ஏற்படும்வரை, மொழிபெயர்ப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்,

எனவே தேசிய மக்கள் சக்தியின் வெற்றியில் மலையக மக்களும் பங்குதாரர்களாக மாறுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது எனவும் அவர் கூறினார். இன்னும் பலர் உரையாற்றினர்.

## நபி பிறந்த தினத்தை முன்னிட்டு இரத்ததான முகாம்

(அக்குறணை குறூப் நிருபர்)

கண்டி, மடவளை பஸார் வை.எம்.எம்.ஏ. அமைப்பு 18 வது வருடமாக ஒழுங்கு செய்த இரத்ததான முகாம் நேற்று (16) திங்கட்கிழமை, மடவளை நொதா வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

நபி முஹம்மத் (ஸல்) அவர்களது பிறந்த தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந் நிகழ்வில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டு தமது பங்களிப்பை வழங்கினர். குறிப்பாக பெண்களும் பெருமளவில் இரத்ததானம் செய்தமை குறிப்பிடத்தக்கது.



## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் பிரசார கூட்டம்

(புத்தளம் தினகரன் நிருபர்)

"இயலும் ஸ்ரீ லங்கா" எமக்காக, நாட்டின் நாளைய எதிர்காலத்திற்காக, ஒரே அணியில் ஒன்றிணைவோம் எனும் மகுடத்திற்கு அமைய ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் பிரசார பொதுக் கூட்டம் கற்பிட்டி நகரில் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது. கற்பிட்டியின் ஐக்கிய தேசிய கட்சியின் நகர அமைப்பாளரும், முன்னாள் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஜே.எம் தாரீக் தலைமையில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், முன்னாள் கொழும்பு மாநகர சபைத் தலைவர் ஆஸாத் சாலி, முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் ஆப்தீன் எஹியா, ஐக்கிய தேசிய கட்சியின் புத்தளம் தொகுதி அமைப்பாளர் ஜேசுதாஸன், முன்னாள் கற்பிட்டி பிரதேச சபையின் உறுப்பினர் அலாவுதீன், பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக மாயாதுன்னவின் கற்பிட்டி இணைப்பாளர் எம்.எச்.எம் நாசர், பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி றஹீமின் கற்பிட்டி இணைப்பாளர் யூ.எம் ஜின்னா, முன்னாள் கற்பிட்டி பிரதேச சபையின் உறுப்பினரும் வடமேல் மாகாண ஆளுநரின் புத்தளம் இணைப்பாளருமான றபாத் அமீன் உள்ளிட்ட இன்னும் பல புத்தளம் மாவட்ட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலய வளவில் சிரமதானம்





உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலய வேள்விப் பொங்கலை முன்னிட்டு ,உடப்பு செல்வபுரம் ஸ்ரீ நாகதம்பிரான் மகளிர் சங்கம், செல்வபுரம் ஒற்றுமை மகளிர் சங்கம் இணைந்து சிரமதானம் ஒன்றை அண்மையில் செய்தது. (உடப்பு குறூப் நிருபர்)

# பிள்ளை வளர்ப்பில் ஆண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் சக்கீலா இஸ்ஸதீன்

**பாலமுனை தினகரன் நிருபர்**

ஒரு சமூகத்தின் எதிர்கால வழிகாட்டியாக திகழ்கின்ற பிள்ளைகளை பெற்றோர்கள் அக்கறையுடன் வளர்க்க வேண்டும். அப்போதுதான் சமூகம் எதிர்பார்த்திருக்கின்ற இலக்கை அடைய முடியும் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் சக்கீலா இஸ்ஸதீன் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் கணவன்மார்களுக்கான 'வளமான பெற்றோர்களிடமிருந்து ஆற்றலுள்ள பிள்ளைகளை உருவாக்குதல்' எனும் தொனிப்பொருளில் நிகழ்வொன்று சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் ஏ.எம். சக்கீலா இஸ்ஸதீன் தலைமையில் அட்டாளைச் சேனையில் நடைபெற்றது.



இவ்விழிப்புணர்வு கருத்தரங்கில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் சக்கீலா இஸ்ஸதீன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தாய், தந்தையர், பிள்ளைகளை சரியான பாதையில் வளர்த்தெடுக்க வேண்டியது அவர்களின் கடமையாகும். இதில் தவறவிடக்கூடாது. இலங்கையை பொறுத்தவரையில் கல்வி மிக முக்கியமாக தேவைப்படுகிறது.

சில இடங்களில் பிள்ளை வளர்ப்பில் ஆண்களின் பங்களிப்பு மிகக் குறைவாக காணப்படுகின்றது.

ஒரு பிள்ளையின் வளர்ச்சி 05 வயதுக்குள் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இவ்வளர்ச்சிக்கு தேவையான சிறந்த ஊட்டச்சத்துள்ள உணவுகளை வழங்க வேண்டும்.

ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம் நாட்டில் ஆரோக்கியமான சமூகம் உருவாகும். பெற்றோர்கள் போசாக்கு நிறைந்த உணவுகளை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்.

பிள்ளைகள் தொடர்பான இலட்சியங்கள் பெற்றோர்களிடத்தில் காணப்பட வேண்டும். அப்போது தான் எமது பிள்ளையை சிறந்த ஒரு சமூகத்தின் தலைவனாக மாற்ற முடியும்.

பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு சரியான இலக்குகளை சிறு வயதிலிருந்தே கற்றுக் கொடுக்க வேண்டும். ஒரு இளைஞன் சரியான இலக்குடன் செல்வான். ஆனால் அவனது இலக்கு சரியாக அமையும் என அவர் தெரிவித்தார்.



ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து சம்மாந்துறை தொகுதியில் வீட்டுக்கு வீடு பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஓய்வு பெற்ற பிரதம பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ்.அப்துல் மஜித் தலைமையிலான குழுவினர் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர். (படம்: பாலமுனை தினகரன் நிருபர்)

# புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை ஸ்ரீ நாகம்பாள் ஆலய அறநெறி பாடசாலையில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



அறநெறி மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன.

இதில் பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்

# முச்சக்கரவண்டி வீதியை விட்டு விலகி விபத்து

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி தோப்பூர் சந்திக்கு அருகில் முச்சக்கரவண்டி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார். இவ்விபத்து நேற்றுமுன்தினம் (15) இடம்பெற்றுள்ளது. காயமடைந்த பெண் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


வெருகல் கோயிலுக்குச் சென்று திருகோணமலை நோக்கி செல்லும்போது இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை நகரைச் சேர்ந்தவர்கள் பயணித்த முச்சக்கரவண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளானது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.


சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

310



வெற்றிடங்கள்

எழுது வினைஞர்/ செயலாளர்கள்

கொழும்பில் அமைந்துள்ள பிரபல நீர்க்குழாய் கம்பனியான Allied Traing International (pvt) Ltd நிறுவனத்திற்கு ஆங்கில மொழி மற்றும் கணனி அறிவுடைய ஆண்/ பெண் இலிகிதர்கள் தேவை. கொழும்புக்கு அருகில் இருப்போர் மட்டும் அழையுங்கள். 070 3598858/ 011 7397777/ 077 7776095 (இல. 301, பழைய சோனகத் தெரு, கொழும்பு -12 .)

063292



# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை மொனராகல

01. மொனராகல, மாவட்டப் பொது வைத்தியசாலையின் பிராந்தியப் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் உபகரணங்களை வழங்குவதற்காக 2024.10.08 வரையிலான காலப்பகுதியில் மு.ப. 9.00 வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| கோவை இலக்கம் | வேலையின் பெயர் | விண்ணப்பத்தின் தகைமைகள் | மீளளிக்கப்படாத விலை விண்ணப்பப்படிவக் கட்டணம் (ரூ) | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூ) |
|---|---|---|---|---|
| DGH/MO/14 நிர்மாணம் / 01/22 | பிறப்புறுப்பு அலகின் மேல் மாடியை நிர்மாணித்தல் | C7 அல்லது அதற்கு மேல் | 2,000.00 | 95,000.00 |

விலைமனுதாரரொருவரின் சார்பாக முன்வரும் தகவுத்திறன்களைக் கொண்டுள்ள முகவரொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதியொருவரினால் பின்வருவனவற்றைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளும் முழுமையான விலைமனுப் படிவத் தொகுதியொன்றின் மூலம் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

i. மொனராகல மாவட்டப் பொது வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகருக்கு எழுத்துருவ விண்ணப்பமொன்று
ii. மொனராகல மாவட்ட பொது வைத்தியசாலையின் அத்தியட்சகருக்கு செலுத்தப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக்கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு
iii. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் போட்டோப்பிரதியொன்று

02. இவ் வைத்தியசாலையினால் வழங்கப்படும் படிவங்களில் மாத்திரம் இதற்காக விண்ணப்பித்தல் வேண்டும். வேறு விதமான மாதிரிப்படிவங்கள் மூலம் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
03. வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் விலைமனுப் படிவங்களை இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.
04. 2024.09.19 முதல் 2024.10.07 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை அலுவலக நேரங்களில் விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
05. கேள்விப் பத்திரங்களை தலைவர், பிரதேச பெறுகைக்குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகலை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது வைத்தியசாலையின் கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும்.
06. 2024.10.08 மு.ப. 9.30 இற்கு விலைமனுக்கள் மூடப்பட்டு இவ்வைத்தியசாலையின் கூட்ட மண்டபத்தில் அவை திறக்கப்படுவதுடன் அனுதிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் அவ்வேளையில் சமுகமளித்திருக்கலாம்.
07. எந்தவொரு விலைமனுவையும் அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக் கொள்ளும் உரிமை பெறுகைக் குழுவின் தலைவருக்கு உரித்தாகும்.

**விசாரணைகள்:**
**கணக்காளர்**
**0552276261 / 0552276912**

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**மாவட்டப் பொது வைத்தியசாலை,**
**மொனராகலை.**



# சீத்தாவக்கபுர நகர சபை

## கேள்வி கோரல்

01. சீத்தாவக்கபுர நகர சபையின் அதிகாரத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் செயற்றிட்டங்களை நிறைவேற்றுவதற்காக தகுதியும் தகைமையும் உள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
02. தகைமை கொண்ட கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படாது இருப்பதுடன் கீழே குறிப்பிடப்படும் தகைமைகளை ஒப்பீட்டு மற்றும் தகவுத்திறன்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | CIDA பதிவு வகுதி | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூபா) | கேள்விப் பிணை முறியின் செல்லுபடி கால எல்லை | ஒப்பந்த கால எல்லை | வரி இன்றிய ஒப்பந்தப் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சீத்தாவக்கபுர நகர சபையின் அலுவலக கட்டிடத்தின் மேல்மாடியின் வேலையை பூர்த்தி செய்தல் மாகாண அபிவிருத்தி வழங்கல் - 2024 செயற்றிட்ட இலக்கம் S48183131005 | C6, C5 | 100,000.00 | 104 நாட்கள் | 45 நாட்கள் | 9,265,745.65 | 3,500.00 |
| **02** | **சீதாவாக்கப்புர நகர சபை கட்டிடத்தின் மேல்மாடி சபை மண்டபம் புதுப்பித்தல் மாகாண அபிவிருத்தி வழங்கல் (அமைச்சு) 2024 செயற்றிட்ட இல.** N248183131011 | C8, C7 | **50,000.00** | 104 நாட்கள் | 45 நாட்கள் | **4,912,686.54** | **3,000.00** |

03. தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் கேள்விகோரல் மேற்கொள்ளப்படும்.
04. கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களை சீத்தாவக்கபுர நகர சபையின் வேலை அதிகாரி (தொ.பே.இல. - 0714460563) இடம் விசாரித்து பெற்றுக் கொள்ள முடிவதுடன் கேள்வி ஆவணங்களை வார நாட்களில் அலுவலக நேரங்களில் கைத்தொழில் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியை மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகச் செலுத்தி மற்றும் சீத்தாவக்கபுர நகர சபையின் செயலாளரிடம் எழுத்து மூல வேண்டுதலை சமர்ப்பித்த பின்னர் 2024.09.17 முதல் 2024.10.01 வரை அலுவலக நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணிக்கு இடையில் சீத்தாவக்கபுர நகர சபையின் கைத்தொழில் பிரிவில் கொள்வனவு செய்யலாம்.
06. தள வேலைத்தள பரிசீலனை சீத்தாவக்கபுர நகர சபைக்குச் சொந்தமான அவிசாவளை ரயில் நிலைய பாதையில் மண்சரிவுக்கு உட்பட்டுள்ள பகுதியில் 2024.09.25 மு.ப 10.00 இற்கு நடைபெறுவதுடன், அதன் பின்னர் கேள்விக்கு முன்னரான கூட்டம் சீத்தாவக்கபுர நகர சபையில் 2024.09.25 மு.ப. 11.00 இற்கு நடைபெறும். இச்சந்திப்புக்கு கேள்விதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
07. சகல கேள்வியுடனும் சீத்தாவக்கபுர நகர சபையின் செயலாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 2025.01.13ம் திகதி வரை இலங்கைக்குள் செயற்படும் செல்லுபடியாகும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட நிபந்தனையற்ற கோரும்போது செலுத்தப்படும் பிணைமுறியொன்று அல்லது இலங்கையில் செல்லுபடியாகும் பணத்தில் முதலாம் செயற்றிட்டத்திற்காக ரூ. 100,000.00 , அத்துடன் இரண்டாம் செயற்றிட்டத்திற்காக ரூ. 50,000.00 பெறுமதியுடைய கேள்விப் பிணைமுறியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
08. பொறியிடப்பட்ட கேள்விகள் நகல்பிரதியுடன் "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி"யுடன் 2024.10.02 பி.ப. 3.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு செயலாளர், சீத்தாவக்கபுர நகர சபை, அவிசாவளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது சீத்தாவக்கபுர நகர சபையின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். அக்கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதி நேரம் முடிவடைந்தவுடன் சீத்தாவக்கபுர நகர சபை கேட்போர் கூடத்தில் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். இத்தினம் அரச விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்படின் அடுத்த வேலை நாளில் பி.ப. 3.00 இற்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்பட்டு கேள்விகள் திறக்கப்படும்.
09. இவ் அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வாசகங்களில் ஏதேனும் முரண்பாடு ஏற்படுமிடத்து சிங்கள மொழி வாசகம் மேலோங்கி நிற்கும்.

**எம்.பீ.கே. மிஹிரானி,**
**செயலாளர் மற்றும் சீத்தாவக்கபுர நகர சபையின் அதிகாரம்,**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**சீத்தாவக்கபுர நகர சபை**
**அவிசாவளை.**
**2024.09.13**



# பெறுகை அறிவித்தல்

## சலவை இயந்திரத்தின் பெறுகை

## தள வைத்தியசாலை (போதனா) ~ கம்பளை

01. பின்வரும் சலவை இயந்திரத்தை வழங்குவதற்கு கம்பளை, தள வைத்தியசாலை (போதனா), பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுவதோடு 2024.10.10 ஆம் திகதி பி.ப. 10.30 வரை விலைமனுக்கள் ஏற்கப்படும்.
02. இலங்கை சந்தைக்காக பொருட்களை வழங்கும் உற்பத்தியாளர்களின் பரிந்துரைக்கப்பட்ட ஏக பிரதிநிதி/ அங்கீகாரம் பெற்ற முகவர்கள் மாத்திரம் இந்த பெறுகையில் பங்கேற்பதற்கு தகுதி பெறுவர்.
03. பின்வருவனவற்றை சமர்ப்பித்து முகவர், பிரதிநிதி அல்லது பரிந்துரைக்கப்படுபவர் அல்லது விலைமனுதாரர் ஒருவரின் சார்பிலான எந்த ஓர் ஆர்வம் பெற்ற தகுதியுடைய விலைமனுதாரர் மூலம் வாங்கப்படும் விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றில் விலைமனு ஆவணம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
    a) கம்பளை, தள வைத்தியசாலை (ஆதார), பிராந்திய பெறுகைக் குழு, தலைவருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்று.
    b) வேலை நேரங்களில் கம்பளை, தள வைத்தியசாலை (ஆதார), கணக்காளருக்கு ஒவ்வொரு உருப்படிக்காகவும் 2,500.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தல் வேண்டும்.
    c) நிழல்பிரதி அல்லது உறுதி செய்யப்பட்ட பிரதி ஒன்றுடன் வர்த்தகப் பதிவு சான்றிதழ்.
    d) இந்த உற்பத்திகளுக்கான உள்ளூர் முகவராக நியமிக்கப்பட்டதன் முதன்மையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்/ கடிதம் ஒன்று.
04. விலைமனு ஆவணங்களை வேலை நாட்களில் மு.ப. 9.30 மற்றும் பி.ப. 2.00 இற்கு இடையே 2024.09.18 ஆம் திகதி தொடக்கம் 2024.10.09 ஆம் திகதி வரை கம்பளை, தள வைத்தியசாலையில் (ஆதார) இருந்து பெற முடியும்.
05. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024.10.10 ஆம் திகதி மு.ப. 10.30 அல்லது அதற்கு முன்னர் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கம்பளை, தள வைத்தியசாலை (ஆதார), கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும்.
06. கம்பளை, தள வைத்தியசாலை (ஆதார), பிராந்திய பெறுகைக் குழு, தலைவரின் அலுவலகத்தில் 2024.10.10 ஆம் திகதி மு.ப. 10.30 இற்கு கேள்விமனுக்கள் மூடப்பட்ட பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும் என்பதோடு இந்த சந்தர்ப்பத்திற்கு ஓர் கண்காணிப்பாளராக விலைமனுதாரர் அல்லது அவர்தம் பிரதிநிதிகளுக்கு பங்கேற்க முடியும்.
07. பெறுகைக்கான மதிப்பிடப்பட்ட செலவு 5,000,000.00 ரூபாவை விஞ்சினால் விலைமனுக்களை சமர்ப்பிப்பதில் விலைமனுதாரர் இலங்கை பிராந்திய பொது ஒப்பந்தத்தில் பதிவு செய்தல் வேண்டும் (PCA 3).
08. இது தொடர்பிலான விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.09.27 ஆம் திகதி மு.ப. 10.30 இற்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.

| இல. | உருப்படி | அளவு | விலைமனு பிணை | செல்லுபடிக் காலம் | விலைமனு பிணை பெயர் |
|---|---|---|---|---|---|
| 01 | தொழில்துறை வகை சலவை இயந்திரம் 50Kg | 01 | ரூபா 50,000.00 | 119 நாட்கள் | மருத்துவ அத்தியட்சகர் த.வை. கம்பளை |
| 02 | தொழில்துறை உலர்த்தி இயந்திரம் 25Kg | 02 | ரூபா 34,000.00 | | |
| 03 | Industrial Flat Work Iron | 01 | ரூபா 5,000.00 | | |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தள வைத்தியசாலை (போதனா),**
**கம்பளை.**

# கிழக்கின் குரல்



## காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரிக்கு கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கிவைப்பு

(காரைதீவு குறூப் நிருபர்)

விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் விளையாட்டு அபிவிருத்திணைக்களம் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரிக்கு ஒரு தொகுதி கிரிக்கெட் உபகரணங்களை வழங்கி



வைத்தது.

விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் அதனை நேரில் சென்று பாடசாலை அதிபர் எம். சுந்தரராஜனிடம் வழங்கி வைத்தார் .

இதற்கு இணைப்பாளராக இருந்து செயல்பட்ட பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா மற்றும் பிரதி அதிபர் திருமதி அருந்தவவாணி சசிகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கான உதவித் தொகை வழங்கி வைப்பு

(தம்பலகாமம் குறூப் நிருபர் )

திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கல்விக்கான உதவித் தொகை பெரண்டினா நிறுவனம் ஊடாக வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வு திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பெரண்டினாவின் கல்வி ஆதரவு திட்டங்களில் ஒன்றாக, ஆண்டுதோறும் குறைந்த வருமானம் கொண்ட பெரெண்டினா பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த திறமையான மாணவர்களுக்கு Bright Students Scholarship திட்டத்தின் மூலம் உதவி வழங்கப்பட்டு வருகின்றது. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு தேவையான மாதாந்த செலவுகளை ஈடு செய்ய பெரிதும் பங்களிப்பு வழங்குகின்றது.

தற்போது, இத்திட்டத்தின் மூலம் வருடந்தோறும் 550ற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு 7 மில்லியனுக்கு மேலான தொகையை வழங்கி ஆதரவளிப்பதில் பெரெண்டினா நிறுவனம் பெருமிதம் கொள்கின்றது. இந்த நிகழ்வானது திருகோணமலை பிரதேச வலய முகாமையாளர் இ.திருச்செல்வம் தலைமையில் இடம் பெற்றது.

## ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாவும் திகாமடுல்ல மாவட்டத்தில் பூர்த்தி

(ஒலுவில் விசேட நிருபர்)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட தேர்தல் அத்தாட்சி அதிகாரியுமான சிந்தக அபேவிக்ரம தெரிவித்தார்.


அம்பாறை தேர்தல் தொகுதியில் 184 வாக்களிப்பு நிலையங்களும், சம்மாந்துறை தேர்தல் தொகுதியில் 93 வாக்களிப்பு நிலையங்களும், கல்முனை தேர்தல் தொகுதியில் 79 வாக்களிப்பு நிலையங்களும்,பொத்துவில் தேர்தல் தொகுதியில் 177 வாக்களிப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். அம்பாறை, சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் ஆகிய நான்கு தொகுதிகளிலிருந்து 05 இலட்சத்து 55 ஆயிரத்தி 432 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அம்பாறை தொகுதியில் 01 இலட்சத்தி 88 ஆயிரத்தி 222 வாக்காளர்களும், சம்மாந்துறை தொகுதியிலிருந்து 99 ஆயிரத்தி 727 வாக்காளர்களும், கல்முனை தொகுதியிலிருந்து 82 ஆயிரத்தி 830 வாக்காளர்களும், பொத்துவில் தொகுதியிலிருந்து 01 இலட்சத்தி 84 ஆயிரத்தி 653 வாக்காளர்களும், வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

தேர்தல் கடமைகளுக்காக சுமார் 05 ஆயிரத்துக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வாக்குச்சாவடிகளில் கடமைகளில் ஈடுபடவுள்ள சிரேஷ்ட, கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கும் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சி செயலமர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் 18 ஆம் திகதி தொடக்கம் தேர்தல் தினமான 21ஆம் திகதி பிற்பகல் 04.00 மணி வரை தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி அருகில் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் தமது வாக்காளர் அட்டையை பெற்றுக் கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.





மட்டக்களப்பு, கிரானிலுள்ள வாராந்த சந்தையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு திரட்டும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.க அமைப்பாளர் மங்கள செனரத் தலைமையில் மக்களை தெளிவூட்டும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

## அட்டாளைச்சேனையில் மாபெரும் மீலாதுன் நபி விழாவும் பரிசளிப்பு வைபவமும்

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)




இறைத்தூதர் முகம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமின் பிறந்த தினத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் மீலாதுன் நபி விழாவும் பரிசளிப்பு வைபவமும் நேற்று(16) கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் மௌலவி ஏ.எல்.எம்.அஷ்ரஃப் சர்க்கி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது மௌலுத் தமாம் வைபவம் நடைபெற்றதுடன், மீலாத் தினத்தையொட்டி நடத்தப்பட்ட கலை, இலக்கிய, கலாசாரம் மற்றும் பாரம்பரியம் நிறைந்த பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளில் திறமை காட்டி வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன், பல்வேறு இஸ்லாமிய கலை நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன. இந்நிகழ்வின் போது ஓய்வு நிலை கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளரும், கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியின் பிரதித் தலைவருமான யூ.எல்.ஏ. அஸீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், நிகழ்வின் பிரதம பேச்சாளராக அக்கரைப்பற்று ஜம்இயதுல் உலமா சபை தலைவர் கலாநிதி எம்.ஐ.எம்.சித்தீக் கலந்து கொண்டு விசேட சொற்பொழிவினையும் நிகழ்த்தினார்.

இதன்போது உலமாக்கள், மார்க்க அறிஞர்கள், கல்லூரி ஆளுநர் சபையினர், ஆளணியினர், துறைசார் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## முச்சக்கரவண்டி விபத்து 3 சிறுவர்கள் படுகாயம்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



காத்தான்குடி 6ஆம் குறிச்சி பிரதான வீதியில் நேற்று மதியம் இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் மூன்று சிறுவர்கள் காயமடைந்துள்ளனர்.

பிரத்தியேக வகுப்புக்கு சென்று விட்டு முச்சக்கரவண்டியில் வீடுகளுக்கு திரும்பிக் கொண்டிருந்த போதே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முச்சக்கரவண்டியில் பயணித்த மூன்று சிறுவர்களும் காயமடைந்த நிலையில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன சேதமடைந்துள்ளன.

சிறுவர்களை பொதுமக்கள் முச்சக்கரவண்டியில் இருந்து மீட்டு அவர்களின் வீடுகளுக்கு அனுப்ப நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 83 ஜூலை கலவரத்தின் முக்கிய சூத்திரதாரிகள் ஜே.வி.பியினரே

### இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன்





(கிண்ணியா மத்திய நிருபர்)

பிராந்திய அரசியல் அதிகாரமுள்ள ஆட்சி முறை என்றால் அது மாகாண சபை முறை மாத்திரமே. இதைத்தான் சர்வதேசமும் அழுத்தமாக வலியுறுத்துவதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து, திருகோணமலை, வெருகல் பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழினம் இழந்த அனைத்தையும் படிப்படியாக பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு பிராந்தியமும் சர்வதேசமும் விரும்புகின்ற இந்த மாகாண சபை முறைமையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது எமது மக்கள் சிந்திய உதிரத்துக்கு கிடைத்த ஒரு சொத்து. இதை யாரும் பங்கு போட முடியாது. அந்த அதிகாரத்தை நாங்கள் கைப்பற்றி கொள்ள வேண்டும்.

தமிழர்களுக்கு இனி தனி நாடு கிடைக்கப்போவதில்லை. தாயகக் கோட்பாடு எனக் கூறிக்கொண்டு, திரியும் சுமந்திரன் இன்னும் தமிழர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார். இந்த கோட்பாடு சாத்தியமே இல்லை என்ற உண்மை இன்று எல்லோருக்கும் தெரிந்து விட்டது. இனி இவர்கள் தமிழினத்தை ஏமாற்ற முடியாது.

தாயகக் கோட்பாடு பற்றி கூறித் திரிகின்றவர்களின் பிள்ளைகள் சர்வதேச பாடசாலைகளில் படிக்கிறார்கள். ஆனால், பல இழப்புகளை சந்தித்து, தாய் தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு இங்கு பாடசாலை இல்லை. ஆசிரியர்கள் இல்லை. கட்டடங்கள் இல்லை.

இனத்துவேசமாக இருக்கின்ற அநுராவை நாம் ஒதுக்க வேண்டும். 83 ஜூலை கலவரத்தின் முக்கிய சூத்திரதாரிகள் ஜே.வி.பியினரே

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்குப் பின்னர், வரப்போகின்ற மாகாண சபை தேர்தலில், எங்களை ஆதரிக்கின்ற கிழக்கில் வாழும் சிங்கள மக்களையும், எங்களோடு இணைந்து இணக்கப்பாட்டு அரசியல் செய்கின்ற முஸ்லிம் தரப்பினரையும் இணைத்துக் கொண்டு, கிழக்கு மாகாண சபையை ஆள வேண்டும்.

நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த கப்பலில் கேப்டன் ஏறுவது போல, ரணில் விக்கிரமசிங்க ஏறிக் கொண்டார். இதன் காரணமாகவே, இன்று இந்த ஜனாதிபதி தேர்தலை நடத்த முடிந்தது.

எனவே தேசத்தின் ஜனநாயகத்தை பாதுகாத்த பெருந்தலைவராக இவர் போற்றப்படுவதாக அவர் தெரிவித்தார்.

## அடுத்த ஜனாதிபதியைத் தீர்மானிப்பதில் பெண்கள் மிகத் தெளிவாக இருக்கின்றனர்

### வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்



நாட்டுக்கு உகந்த அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிப்பதில் நாட்டிலுள்ள பெண்கள் மிகத் தெளிவாகவிருப்பதாக வடமேல் மாகாண ஆளுநர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து ஏறாவூரில் நேற்று நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நாட்டுக்கு நல்லது செய்யவும் எதிர்கால இளம் சமுதாயத்தினரை பொருளாதார நெருக்கடியின்றி, மோதலின்றி, இனவாதமின்றி, மதவாதமின்றி வழிநடத்தவும் பொருத்தமான அனுபவ ஆளுமை ஆற்றலுள்ள அங்கீகரிக்கப்பட்ட தலைவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே எனவும் அவர் குறிப்பிட்டார்.

பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் ஆதரவாளர்களாகத் திரண்டிருந்த கூட்டங்களில் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர் நஸீர் அஹமட், வரப்போகின்ற ஜனாதிபதி யார் என்பதை பெண்கள் தீர்மானித்து விட்டார்கள். ஏனெனில் எரிவாயு இல்லாமல் பட்ட கஷ்டம் பெண்களுக்குத் தான் தெரியும்.

நாட்கணக்கில் மாதக்கணக்கில் கேஸ் இல்லாமல் மின்சாரம் இல்லாமல் நாடே இருளில் மூழ்கியது. நாடு எதிர்கொண்ட பொருளாதார வங்குரோத்து நிலைமை, கொரோனா உயிர்க்கொல்லி வைரஸ் தாக்கம், இனவாத வன்முறைகள் ஆகியவற்றினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் வீட்டை நிர்வகிக்கும் பெண்களே. அதனால், இன்னுமொருமுறை தகுதியற்றவர்களின் கையில் நாட்டைக் கொடுத்து நாட்டைச் சீரழிக்க பெண்கள் விரும்பவில்லை என்பது நாங்கள் செல்லுமிடமெல்லாம் வெளிப்படையாகத் தெரிகிறது.

வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலிலே மற்றவர்களெல்லாம் ஜனாதிபதி வேட்பாளர்களாக இருக்கின்றபோது ரணில் விக்கிரமசிங்க மட்டுமே தற்போதும் ஜனாதிபதி என்ற அனுபவ அந்தஸ்தில் இருந்து ஜனாதிபதியாகவே தேர்தலில் போட்டியிடுகின்றார். இப்போது அவர் நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதி, எதிர்வரும் 21ஆம் திகதிக்குப் பின் அவர் பத்தாவது ஜனாதிபதியாக இருப்பார்.

அரசியலில் அடியிலிருந்து நுனிவரை படிப்படியாக பதவி உயர்வு கண்ட பண்பான தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே.

ரணில் விக்கிரமசிங்க அவரது வாழ்நாள் அரசியலில் இனங்களை சிறுமைப்படுத்தி ஒரு வார்த்தைகூட பேசிய சரித்திரமில்லை, மதவாதம், இனவாதம், மொழி பேதம் காட்டாது அனைவரையும் சமமாக மதித்து சகவாழ்வை விரும்பும் ஒரு பெருந்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே.

நாம் இப்போது பயத்தின் காரணமாக குர்ஆன்களை குப்பையில் போடுவதில்லை, நாம் இப்போது இருட்டில் இருக்கத் தேவையில்லை. நாம் இப்போது எரிபொருள் நிலையங்களில் எந்த வரிசையிலும் நிற்பதில்லை, நாம் இப்பொழுது மதரசாக்களை மூடுவதில்லை இவற்றுக்கெல்லாம் காரணம் ரணில் விக்கிரமசிங்கவே என்றும் அவர் தெரிவித்தார்.

## மீலாத் தினத்தை முன்னிட்டு விசேட துஆ பிரார்த்தனையும், அன்னதானமும்

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

நபிகள் நாயகத்தின் பிறந்த தினத்தை முன்னிட்டு காத்தான்குடி ஹைராத் ஜும்மா பள்ளிவாசலில் அன்னதான வைபவமும்,விசேட துஆ பிரார்த்தனையும் நேற்று காலை நடைபெற்றது.

அப்துல் ஜவாத் ஆலிம் வலியுழ்ழாஹ் நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் மௌலவி எம்.ஏ.அப்துல் மஜீத் றப்பானி விசேட பிராத்தனையை நிகழ்த்தினார்.



# குறித்த நபருக்குத்தான் ஆதரவளிக்க வேண்டும் என எவரும் ஈ.பி.டி.பி. கட்சிக்குப் பணிக்க முடியாது

## ரணிலே எமது தெரிவு – அமைச்சர் டக்ளஸ்

கரவெட்டி நிருபர்

"அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஏதோவொரு வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உறவை வைத்துள்ளன. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது ஆத்மார்த்த ஆதரவு அவருக்குத்தான் என அந்தக் கட்சியினர் ஜனாதிபதியிடம் கூறி வருகின்றனர். ஆனால், அவர்கள் வெளியில் வேறு முகத்தைக் காட்டுகின்றனர்." என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் – நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டு மைதானத்தில் "ரணிலால் இயலும்" என்ற தொனிப்பொருளில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற குறித்த கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறியிருந்தார்.



இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் ஆட்சியில் இருந்தால்தான. இந்நாடு வீழ்ச்சியில் இருந்து மீள முடியும். எதிர்வரும் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கதான் வெல்ல இருக்கின்றார். அந்த வெற்றியில் நாமும் பங்காளராக வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் பல கட்சிகள் உள்ளன. அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஏதோவொரு வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உறவை வைத்துள்ளன. எதிர்வரும் தேர்தலில் தமது ஆத்மார்த்த ஆதரவு அவருக்குத்தான் என அந்தக் கட்சியினர் ஜனாதிபதியிடம் கூறி வருகின்றனர். ஆனால், அவர்கள் வெளியில் வேறு முகத்தைக் காட்டுகின்றனர்.

குறித்த நபருக்குத்தான் ஆதரவளிக்க வேண்டும் என எவரும் ஈ.பி.டி.பி. கட்சிக்குப் பணிக்க முடியாது. ஈ.பி.டி.பி. கட்சி என்ற வகையில் நாம் ஜனாதிபதியை ஆதரிக்க முடிவு செய்துள்ளோம்.

எப்போதும் மக்கள் நலன் சார்ந்த தனித்துவமான முடிவைத்தான் எமது கட்சி எடுத்து வந்துள்ளது. ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு யார் பணிப்புரை வழங்குகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெல்வதன் ஊடாகவே நாட்டுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை வழங்க முடியும். தமிழ் பேசும் மக்களின் அரசியல் சார்ந்த, அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, அவர்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளாக இருந்தாலும் சரி. அவர் ஊடாகவே தீர்வை பெற்றுக் கொள்வது சாத்தியமாகும் என நம்புகின்றோம் என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

# வடக்கின் உதயம்

## மன்னார் மாவட்டத்தில் தேர்தலில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி

### மன்னார் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் கனக சபாபதி கனகேஸ்வரன்

மன்னார் குறூப் நிருபர்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது இம்முறை மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக மன்னார் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் கனக சபாபதி கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று(16) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,

எதிர்வரும் 21ஆம் திகதி இடம் பெற உள்ள ஜனாதிபதி தேர்தலின் போது வன்னி தேர்தல் தொகுதி மன்னார் மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் 98 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம் பெற உள்ளது. எமது நிர்வாக தேவை கருதி குறித்த 98 வாக்களிப்பு நிலையங்களும் 25 வலயங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வலயமும் உதவி தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் ஊடாக குறித்த 98 வாக்களிப்பு நிலையங்களும் மேற்பார்வையின் கீழ் செயல்படும்.

மாவட்ட வாக்கு எண்ணும் நிலையமாக மன்னார் மாவட்டச் செயலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதற்குள் 7 வாக்கு எண்ணும் நிலையங்கள் ஸ்தாபிக்கப்படும். அதனூடாக மாவட்டத்தின் வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

மன்னார் மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்பை பொறுத்தமட்டில் மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற 10 ஆயிரத்து 36 உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று வாக்களிப்பு இடம்பெற்றது.

இதில் 9 ஆயிரத்து 945 உத்தியோகத்தர்கள் தபால் மூல வாக்களிப்பை மேற்கொண்டுள்ளனர். 91 பேர் வாக்களிக்கவில்லை.குறித்த விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். ஜனாதிபதி தேர்தல் குறித்து அனைத்து பயிற்சி வகுப்புக்களும் இடம் பெற்றுள்ளது.

## யாழில். 13 வயது சிறுவன் உள்ளிட்ட மூவர் தவறான முடிவால் உயிர்மாய்ப்பு

யாழ் . விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை வெவ்வேறு பகுதிகளில் மூவர் தவறான முடிவெடுத்து தமது உயிரை மாய்த்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம் கொட்டடி பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய யுவதி ஒருவர் , வீட்டார் வெளியில் சென்ற சமயம் வீட்டில் தனது உயிரை மாய்த்துள்ளார்.

பெரியவிளான் பகுதியை சேர்ந்த 13வயது சிறுவன் , தொலைபேசியில் கேம் விளையாட தந்தையிடம் தொலைபேசியை கேட்ட போது. தந்தை தொலைபேசியை கொடுக்காததால் வீட்டின் அறை ஒன்றுக்குள் சென்று தனது உயிரை மாய்த்துள்ளான்.

நெடுந்தீவு பகுதியில் 33 வயதுடைய இளைஞன் தனது உயிரை மாய்த்துள்ளான்.

## யாழில் நாய்க்கு இறுதிகிரியை

யாழ் . விசேட நிருபர்



கடந்த பத்தாண்டு காலமாக தனது வீட்டினை காவல் காத்து வந்த நிலையில் உயிரிழந்த பைசா என அழைக்கப்படும் நாய்க்கு , வீட்டின் உரிமையாளர் பெருமெடுப்பில் இறுதிக்கிரியை செய்து, உடலை நல்லடக்கம் செய்துள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டு 08ஆம் மாதம் 20ஆம் திகதி பிறந்த பைசா என பெயர் சூட்டப்பட்ட நாய்க்குட்டியை அதனது 08ஆவது வயதில் இருந்து, யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பகுதியில் வசிக்கும் நபர் ஒருவர் வளர்த்து வந்துள்ளார்.

கடந்த பத்தாண்டு காலமாக பைசாவை அவர் வளர்த்து வந்துள்ளார். அந்நிலையில், கடந்த சில நாட்களாக நோய் வாய்ப்பட்டிருந்த பைசா சனிக்கிழமை உயிரிழந்துள்ளது. அதனை அடுத்து , பிரேத பெட்டி ஒன்றில் பைசாவை வைத்து, வீட்டில் அஞ்சலிக்காக வைத்திருந்தார். வீட்டார் , அயலவர்கள் என பைசாவிற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

## யாழ்.மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்.விசேட நிருபர்



யாழ்.மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் பெருமளவில் பூர்த்தியடைந்துள்ளதாக யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக குழுக் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுடனான முன்னாயத்தக் கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

குழுக்களின் கடமைகளுக்காக இணைக்கப்பட்டுள்ள அலுவலர்கள் அனைவரும் தேர்தல் பணியாளர்கள் என்ற ரீதியில் பாகுபாடின்றி ஒருமித்து ஒருங்கிணைந்து சிறப்பாகச் செயற்பட வேண்டும்.

வாக்கெண்ணும் நிலையமாகச் செயற்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் குழுக்களின் செயற்பாட்டில் ஈடுபடும் அலுவலர்கள் தங்களது சிறப்பான தொடர்பாடல் திறன் மூலம் வினைத்திறனாகச் செயற்பட்டுத் தேர்தல் கடமைகளுக்காக இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் நலன்களைப் பேணிச் சிறப்பான செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறும் மாவட்டச் செயலர் வலியுறுத்தினார்.

## தமிழ் பொது வேட்பாளர் என்பது மாயமான்

யாழ் . விசேட நிருபர்

தமிழ்ப் பொது வேட்பாளர் என்கின்ற ஒரு மாயமானுக்கு மயங்காமல் அதனைத் தூக்கி வீசி விட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மிகச் சொற்ப அளவிலான எண்ணிக்கையானவர்கள் தமிழ்ப் பொது வேட்பாளர் என்கின்ற ஒரு மாயமானுக்கு மயங்கி அதனை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றார்கள். அப்படியான முயற்சியிலே எங்களுடைய கட்சி ஈடுபட்டது கிடையாது. அதிலே எங்களது எந்தப் பங்களிப்பும் கிடையாது என தெரிவித்தார்.

## நெடுங்கேணிப்பகுதியில் வீடு கையளிப்பு

வன்னி இராணுவ கட்டளைப் பணியகத்தின் ஒழுங்கு படுத்தலில் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு நிரந்தரமாக வீடொன்று அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவில் கற்குளம் கிராம சேவகர் பிரிவின் கீரிசுட்டான் கிராமத்தில் பதினைந்து லட்சம் ரூபா செலவில் குறித்த வீடு புனர் நிர்மாணம் செய்யப்பட்டது.

இதில் கிராம சேவையாளர் செ. சுபாஷும் ராணுவ தளபதிகள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அநுராதபுர மாவட்டத்தில் 7,41,862 வாக்காளர் இம்முறை வாக்களிக்க தகுதி

திறப்பனை தினகரன் நிருபர்

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தலின் போது அநுராதபுர மாவட்டத்தில் இம்முறை 7,41,862 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.


இதில் 55 191 பேர் தபால் மூல வாக்களிப்புக்கு தகுதி பெற்றவர்கள் ஆவர். இவர்களுக்கான தபால் மூல வாக்குப்பதிவுகள் 54 மத்திய நிலையங்களில் இடம் பெற்றுள்ளது.

அநுராதபுர மாவட்டத்தில் 636 வாக்களிப்பு நிலையங்கள் இம்முறை ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, 35 நிலையங்களில் தபால் மூல வாக்கெண்ணும் பணிகள் இடம் பெறவுள்ளன.

ஏனைய வாக்கெண்ணும் பணிகளுக்கு 60 மத்திய நிலையங்கள் இம்முறை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயம் வாக்கெண்ணும் நடவடிக்களுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு இதற்காக 10 287 உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தொகுதி அடிப்படையில் மதவச்சி தேர்தல் தொகுதியில் 99,897, ஹொரவபத்தான 94,739, அநுராதபுரம் மேற்கு 1,20,050, அநுராதபுரம் கிழக்கு 1,14,924 , கலாவெவ 1,41, 456, மிகிந்தலை 75,292 , கெக்கிராவ 95,517. என்ற அடிப்படையில் வாக்காளர்கள் அநுராதபுரம் மாவட்டத்தில் இம்முறை வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# நகர்வலம்



## புத்தளம் மாவட்டத்தில் வாக்களிப்புக்கான ஏற்பாடுகள் பூர்த்தி

புத்தளம் தினகரன், கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்கள்

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் 663673 பேர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக புத்தளம் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும், மாவட்ட செயலாளருமான எச்.எம்.எஸ்.பீ.ஹேரத் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்ட செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (15) காலை இடம் பெற்ற ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

புத்தளம் மாவட்டத்தில் 14967 அரச ஊழியர்கள் தபால் மூல வாக்களிப்பு செய்துள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள 5 தேர்தல் தொகுதிகளிலும் 470 வாக்குச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் வாக்குகளை எண்ணும் பணிகளுக்கென புத்தளம் சென் அன்றூஸ், பாத்திமா மகளிர் கல்லூரி மற்றும் செய்னப் பாடசாலை என்பன தயார்படுத்தப்படுவதாகவும் அவர் இதன் போது கூறினார்.

54 கணக்கெடுப்பு நிலையங்களும் 8 தபால் மூல கணக்கெடுப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்படுவதாகவும், தபால் மூல வாக்குகள் மாலை 7.00 மணிக்கு எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்படுமெனவும், அது போன்று ஏனைய வாக்குகள் எண்ணும் பணிகள் இரவு 8.00 மணியளவில் ஆரம்பிக்கப்படும் என்றும் இந்த செய்தியாளர் கலந்துரையாடலில் அவர் குறிப்பிட்டார்.

இதே வேளை பூக்குளம் வாக்குச்சாவடிகளுக்கு தேவையான அதிகாரிகள் மற்றும் வாக்குப் பெட்டிகள் என்பன வில்பத்து வனப் பகுதி ஊடாக கொண்டு செல்ல தேவையான அனுமதியினை வன ஜீவராசிகள் திணைக்களத்திடம் பெற்றுள்ளதாகவும், கல்பிட்டி முகத்துவார வாக்குச் சாவடிக்கு படகுகள் மூலம் அதிகாரிகள் மற்றும் வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைக்கப்படும் என்றும் இதன் போது அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த நிலையில் அன்றைய தினம் ஏதும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படலாம் என்ற முன்னெச்சரிக்கையாக அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் தயார் நிலையில் வைக்கப்படுவார்கள் என்றும் இவர்களுக்கு உதவியாக பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் ஈடுபடுவார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## பேருவளையில் ஐ.ம.சவின் மாபெரும் பொதுக்கூட்டம்

### ஜனாதிபதி வேட்பாளர சஜித் பிரேமதாச பங்கேற்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து மாபெரும் பொதுக் கூட்டம் நாளை 18ஆம் திகதி புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு பேருவளை பீச் பார்க் திடலில் நடைபெறவுள்ளது.

பேருவளை ஐ.ம.ச பிரதம அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி பொதுக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட உரை நிகழ்த்துவார்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் நகர, பிரதேச சபை தலைவர்கள், உறுப்பினர்கள் உட்பட அரசியல் பிரமுகர்கள் உரை நிகழ்த்தவுள்ளதோடு பெருந்திரளான பொதுமக்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் தெரிவித்தார்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் அற்றைத்திங்கள்

தமிழின் மூத்த படைப்பாளிகளும், தகைசான்ற ஆளுமைகளும், தமது வாழ்வியல் அனுபவங்கள், கலை, இலக்கிய நட்பு எழுகைகள், பண்பாட்டுத் தாக்கங்கள், படைப்பு முயற்சிகள் முதலியவற்றைப் பகிர்ந்து கொள்ளும் அற்றைத்திங்கள் நிகழ்வு இன்று 2024.09.17ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், மூத்த உரைபெயர்ப்பாளர் சபாபதி சிவகுருநாதன் உரை நிகழ்த்தவுள்ளார்.

## ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய விநாயகர் சதுர்த்தி விழா





கொழும்பு, செட்டியார் தெரு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய விநாயகர் சதுர்த்தி விழா (படங்கள் கொழும்பு வடக்கு நிருபர்)

## பதுளை மாநகர சபை அதிகாரிகள் குழு அநுராதபுரம் வருகை

திறப்பனை தினகரன் நிருபர்



அநுராதபுரம் மாநகர சபையின் வேலைத்திட்டங்கள் மற்றும் அதன் பல்வேறு அனுபவங்களை நேரில் பகிர்ந்து கொள்ளும் நோக்கில், பதுளை மாநகர சபையின் மாநகர ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவொன்று அண்மையில் அநுராதபுரம் மாநகர சபைக்கு விஜயம் ஒன்றை மேற் கொண்டிருந்தனர்.

2023 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி நிறுவனங்களின் செயல் திறன் மற்றும் அதன் பல்வேறு அனுபவங்கள் தேசிய அளவிலான மதிப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு அதிக ஒட்டுமொத்த செயல் திறனைக் கொண்ட நிறுவனங்களில் அநுராதபுரம் மாநகர சபை தெரிவு செய்யப்பட்டு 09 விருதுகளுடன் அநுராதபுர மா நகர சபைக்கு தங்க விருது வழங்கப்பட்டது.அநுராதபுரம் மாநகர சபையின் பல்வேறு நடவடிக்கைகளை நேரில் பார்த்து அதன் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் நோக்கில் பதுளையில் இருந்து வந்த அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் அநுராதபுரம் மாநகரசபையின் கீழ் இயங்கி வரும் பல்வேறு திணைக்களங்கள் மற்றும் அங்குள்ள வேலைப்பகிர்வுகளை அவதானித்துள்ளனர். இதன்போது

மாநகர சபை வளாகத்தை பார்வையிட்ட பின்னர் அநுராதபுரம் மாநகர ஆணையாளர் ருவன் விஜேசிங்க, பதுளை மாநகர ஆணையாளர் ஈ.பி.ஜே.பி.ஆரியரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினரின் சந்திப்பும் கலந்துரையாடலும் இங்கு இடம் பெற்றது.

அநுராதபுர மாநகர சபையில் இடம் பெற்ற பல்வேறு நடவடிக்கைகளை பார்வையிடும் அதிகாரிகள் குழுவினரையும், மாநகர சபை வளாகத்தையும் படங்களில் காணலாம்.

# நியூசிலாந்து டெஸ்ட் தொடருக்கான இலங்கை குழாத்தில் 16 மாதங்களுக்குப் பின்னர் ஓஷத

## நிஷான் மதுஷ்க, கசுன் ராஜித்த, நிசல தாரக்கவுக்கு இடமில்லை

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான 16 பேர் கொண்ட இலங்கைக் குழாத்தில் 16 மாதங்களின் பின்னர் ஓஷத பெர்னாண்டோ அழைக்கப்பட்டுள்ளார். இதனை அடுத்து ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் நிஷான் மதுஷ்க அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த சகலதுறை வீரர் நிசல தாரக்க மற்றும் வேகப்பந்து வீச்சாளர் கசுன் ராஜித்த ஆகியோருக்கும் இலங்கைக் குழாத்தில் இடம் கிடைக்கவில்லை. தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை ஏ அணி சார்பில் துடுப்பாட்டத்தில் சோபித்த நிலையிலேயே 32 வயதான ஓஷத அணிக்குத் திரும்பியுள்ளார். கிம்பர்லியில் நடந்த தென்னாபிரிக்க ஏ அணிக்கு எதிரான முதலாவது உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் ஓஷத இரு இன்னிங்ஸ்களிலும் முறையே 122 மற்றும் 80 ஓட்டங்களைப் பெற்று இலங்கை ஏ அணியின் வெற்றிக்கு உதவியதோடு போட்டியின் ஆட்ட நாயகன் விருதையும் வென்றார்.

இதனையடுத்து அவர் தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தின் பாதியிலேயே நாட்டுக்கு திரும்ப அழைக்கப்பட்டு இலங்கை டெஸ்ட் குழாத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுவரை 21 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 1 சதம் மற்றும் 7 அரைச்சதங்களுடன் 1091 ஓட்டங்களைப் பெற்றிருக்கும் ஓஷத பெர்னாண்டோ கடைசியாக இலங்கை டெஸ்ட அணியில் இடம்பெற்றது 2023 மார்ச் மாதத்திலாகும்.

மறுபுறம் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் சோபிக்கத் தவறியதை அடுத்தே மதுஷ்க வாய்ப்பை இழந்துள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான முதல் இரு டெஸ்ட் போட்டிகளிலும் ஆடிய அவர் நான்கு இன்னிங்ஸ்களிலும் 4, 0, 7 மற்றும் 13 ஓட்டங்களையே பெற்றார். இதனால் அவர் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பதினொருவர் அணியில் இடம்பெறத் தவறியிருந்தார்.

அவருக்கு பதில் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் ஆரம்ப வீரராக களமிறங்கிய பத்தும் நிசங்க அணியின் வெற்றிக்கு உதவும் வகையில் சதம் ஒன்றை குவித்தார். இதுவும் 25 வயது விக்கெட்காப்பு துடுப்பாட்ட வீரரான மதுஷ்க அணியில் தமது இடத்தை தக்கவைக்க முடியாததற்கு காரணமாகியுள்ளது.

அதேபோன்று இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் வேகப்பந்து வீச்சாளராக அசித்த பெர்னாண்டோ, லஹிரு குமார, விஷ்வ பெர்னாண்டோ மற்றும் மிலான் ரத்னாயக்க செயற்பட்ட நிலையில் தாரக்க மற்றும் ராஜித்தவுக்கு அணியில் வாய்ப்புக் கிட்டவில்லை. இந்நிலையில் நியூசிலாந்துக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளும் நடைபெறும் காலி மைதானம் சுழற்பந்துக்கு சாதகமானது என்பதால் மேலதிக வேகப்பந்து வீச்சாளர்கள் தொடர்பில் தேர்வாளர்கள் அவதானம் செலுத்தவில்லை எனத் தெரிகிறது.

இந்நிலையில் ஓஷத அணிக்கு அழைக்கப்பட்டபோதும் பதினொருவர் அணியில் இடம்பெறுவதற்கு பெரும் சவால் உள்ளது. திமுத் கருணாரத்ன, நிசங்க, குசல் மெண்டிஸ், தினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூஸ், தனங்சய டி சில்வா மற்றும் கமிந்து மெண்டிஸ் ஆகியோர் பதினொருவர் அணியில் இடம் பெற அதிக வாய்ப்பு உள்ளது. சதீர சமரவிக்ரமவும் அணியில் இடம்பெறுவதற்கு காத்திருப்பு துடுப்பாட்ட வீரராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் துடுப்பாட்டத்தில் சோபிக்கத் தவறிய குசல் மெண்டிஸ் ஒரு விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரராகவே அணியில் தேர்வு செய்யப்படுவார் என்று தேர்வுக் குழுத் தலைவர் உபல் தரங்க ஏற்கனவே குறிப்பிட்டுள்ளார். இதன்படி அவர் துடுப்பாட்ட வரிசையில் 7 ஆவது இடத்திலேயே களமிறங்க வாய்ப்பு உள்ளது.

பதினொவர் அணிக்காக எஞ்சியிருக்கும் மூன்று இடங்களில் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜயசூரியவுடன் இரு வேகப்பந்து வீச்சாளர்கள் அல்லது மேலதிக சுழற்பந்து வீச்சாளராக ஜெப்ரி வென்டர்சே இடம்பெற வாய்ப்பு அதிகம்.

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரு டெஸ்ட் போட்டிகளும் காலியில் நடைபெறவுள்ளதோடு முதல் டெஸ்ட் போட்டி நாளை (18) ஆரம்பமாகும்.

**இலங்கை டெஸ்ட் குழாம்:** தனஞ்சய டி சில்வா (தலைவர்), திமுத் கருணாரத்ன, பத்தும் நிசங்க, குசல் மெண்டிஸ், அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், கமிந்து மெண்டிஸ், சதீர சமரவிக்ரம, ஓஷத பெர்னாண்டோ, அசித்த பெர்னாண்டோ, விஷ்வ பெர்னாண்டொ, லஹிரு குமார, பிரபாத் ஜயசூரிய, ரமேஷ் மெண்டிஸ், ஜெப்ரி வன்டர்சே, மிலான் ரத்னாயக்க.



## இலங்கையர்களுக்கு ஐ.சி.சி. கௌரவம்



சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் ஓகஸ்ட் மாதத்திற்கான சிறந்த வீரர் மற்றும் வீராங்கனை ஆகிய இரு விருதுகளையும் இலங்கையின் துனித் வெள்ளாலகே மற்றும் ஹர்ஷிதா சமரவிக்ரம தட்டிச்சென்றுள்ளனர்.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் சோபித்ததை அடுத்தே வெள்ளாலகே இந்த கௌரவத்தை பெற்றிருப்பதோடு ஹர்ஷிதா இலங்கை மகளிர் அணியின் அயர்லாந்து சுற்றுப்பயணத்தில் அபாரமாக செயற்பட்டிருந்தார்.

முன்னதாக ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் ஒரே மாதத்தில் ஒரே நாட்டைச் சேர்ந்த இருவர் ஐ.சி.சி. கௌரவத்தைப் பெற்றுள்ளனர். அது இந்த ஆண்டு ஜூனில் இந்தியாவின் ஜஸ்பிரிட் பும்ரா மற்றும் ஸ்மிரித்தி மந்தனா மாதத்தின் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையாக பதிவாகினர்.

இதன்போது வெள்ளாலகே தென்னாபிரிக்க சுழற்பந்து வீச்சாளர் கேஷவ் மஹராஜ் மற்றும் மேற்கிந்திய தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் ஜெய்டன் சீல்ஸ் ஆகியோருடன் போட்டியிட்டே மாதத்தின் சிறந்த வீரராக தெரிவாகியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை வெல்ல உதவிய வெள்ளாலகே அந்தத் தொடரின் நாயகனாக தெரிவானதோடு அவர் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் சோபித்தார்.

மறுபுறம் ஹர்ஷிதா அயர்லாந்து சுற்றுப்பயணத்தில் ஒருநாள் சதம் ஒன்றை பெற்றதோடு அவர் ஒருநாள் சர்வதேச போட்டியில் சதம் பெற்ற மூன்றாவது இலங்கை வீராங்கனையாக இடம்பெற்றார்.

# சர்வதேச செய்திகள்

## டிரம்புக்கு எதிரான மற்றொரு படுகொலை முயற்சி முறியடிப்பு: சந்தேக நபர் கைது

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டோனால்ட் டிரம்ப்பைப் படுகொலை செய்ய முயன்றவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புளோரிடா மாநிலத்தின் வெஸ்ட் பாம் கடற்கரை வட்டாரத்தில் உள்ள கொல்ப் மைதானத்தில் டிரம்ப் விளையாடிக்கொண்டிருந்தபோது அமெரிக்க நேரப்படி கடந்த ஞாயிறன்று (15) சம்பவம் நடந்துள்ளது. டிரம்ப்புக்கு அருகே இருந்த புதர்களில் துப்பாக்கி ஏந்திய ஒருவர் இருப்பதை இரகசியச் சேவைப் பிரிவு அதிகாரிகள் கண்டனர்.

அவரைத் துப்பாக்கியால் சுட்டனர். துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் எப்.பி.ஐ. அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். புதர்களில் ஏ.கே47 ரகத் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது.

ஒருவர் காரில் தப்பிச் செல்வதை அங்கிருந்தவர் கண்டார். தகவல் அறிந்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

58 வயது ராயன் வீஸ்லி ரவ்த் என்ற ஆடவர் கைதுசெய்யப்பட்டார். டிரம்ப் பாதுகாப்பாக இருப்பதை அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.



அண்மைய மாதங்களில் 2ஆவது முறை டிரம்ப்பைக் கொல்ல முயற்சி இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் நடந்த விரைவில் தனது ஆதரவாளர்களுக்கு மின்னஞ்சல் செய்தி ஒன்றை அனுப்பிய டிரம்ப், 'என்னை எதனாலும் தடுக்க முடியாது. நான் அடிபணிய மாட்டேன்!' என்று குறிப்பிட்டுள்ளார்.

டிரம்பின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க தாம் உத்தரவு பிறப்பித்ததாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதமும் டிரம்ப்பைக் கொல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அப்போது இரகசியச் சேவைப் பிரிவின் அணுகுமுறை குறைகூறப்பட்டது. பின்னர் டிரம்ப்புக்குக் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இம்முறை படுகொலை முயற்சியை முறியடிக்க அது உதவியிருக்கலாம் என்று கவனிப்பாளர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில் டிரம்ப்பைப் படுகொலை செய்ய முயன்றவர் குறித்துக் கூடுதல் தகவல் வெளிவந்துள்ளது. ஹவாயியைச் சேர்ந்தவரான ராயன் வீஸ்லி ரவ்த் உக்ரைன் ஆதரவாளர் என்று தெரியவந்துள்ளது.

உக்ரைனுக்கு ஆதரவு தெரிவிக்கும் சில பதிவுகளை அவர் சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ளார். அது தொடர்பில் நியூயோர்க் டைம்ஸ் செய்தி நிறுவனத்துக்கு ரவ்த் நேர்காணலும் அளித்துள்ளார்.


2022இல் தாம் உக்ரைனுக்குச் சென்றதாகவும் போரில் தொண்டூழியராக சில மாதம் கழித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். டிரம்ப்பின் பிரசாரத்துக்கு எதிராக ஒரு பதிவையும் ரவ்த் 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ளார்.

எதிர்வரும் நவம்பரில் நடைபெறும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸுக்கு எதிராக டிரம்ப் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பப்புவாவில் போட்டி பழங்குடியினர் துப்பாக்கிச் சண்டை: 30 பேர் பலி

பப்புவா நியூகினியில் தங்கச் சுரங்கம் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாக இரு போட்டிப் பழங்குடி மக்கள் இடையே இடம்பெற்றிருக்கும் துப்பாக்கிச் சண்டையில் குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மோதலைத் தடுப்பதற்கு சூடு நடத்துவது உட்பட பாதுகாப்புப் படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாக நாட்டின் பொலிஸ் அணையாளர் குறிப்பிட்டுள்ளார். மோதல் இடம்பெற்ற பகுதிகளில் மதுபான விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதோடு இரவு நேர ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.



பப்புவா நியூகினியின் மத்திய மலைப் பிராந்தியத்தில் உள்ள பொர்கேரா தங்க சுரங்கத்தை சூழவே பதற்றம் நீடிக்கிறது.

இங்கு பியன்டே பழங்குடியினருக்குச் சொந்தமான நிலத்தில் சகார் பழங்குடியினர் குடியேறிய நிலையிலேயே மோதல் வெடித்துள்ளது.

## மத்திய ஐரோப்பாவில் கடும் வெள்ளம்: பலர் உயிரிழப்பு

பத்திய ஐரோப்பாவில் மேலும் பல ஆறுகள் கரைபுரண்டுள்ள நிலையில் போலந்து தொடக்கம் ருமேனியா வரை வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதோடு இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர். பல நாட்கள் பெய்த கடும் மழையை அடுத்து பல நகரங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

செக் குடியரசு மற்றும் போலந்துக்கு இடையிலான எல்லைப் பகுதி மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. சில பாலங்கள் உடைந்திருப்பதோடு வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. கிழக்கு ருமேனியாவின் கிராமங்கள் மற்றும் நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.



போலந்து அரசு நேற்று தேசிய அனர்த்த நிலையை அறிவித்தது. செக் குடியரசின் சில பகுதிகளில் ஓராண்டு பெய்யும் மழையளவில் கிட்டத்தட்ட பாதி பெய்யக்கூடுமென வானிலை ஆய்வகம் எச்சரித்திருந்தது.

ருமேனியாவிலும் ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன. அதில் சிக்கிக் குறைந்தது நால்வர் உயிரிழந்தனர்.

## இஸ்ரேலுடன் தொடர்ந்து போரிட ஹமாஸ் உறுதி: காசாவில் தாக்குதல்கள் நீடிப்பு

இஸ்ரேலுக்கு எதிராக தொடர்ந்து போரிடுவதற்கு போதிய வளங்கள் இருப்பதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

காசா போர் ஒரு வருடத்தை நெருங்கி இருப்பதோடு இஸ்ரேல் அங்கு தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில், 'எதிர்ப்புப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு அதிக திறன் இருப்பதாக' மூத்த ஹமாஸ் உறுப்பினரான ஒசாமா ஹம்தான் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்துள்ளார்.

'உயிர்த்தியாகங்கள் மற்றும் அர்ப்பணிப்புகள் இடம்பெற்றபோதும் இந்தப் போர் அனுபவத்தைத் தந்திருப்பதோடு புதிய தலைமுறையினர் போராட்டத்திற்குள் உள்வாங்கப்படுகின்றனர்' என்று அவர் குறிப்பிட்டார்.

காசாவில் ஹமாஸ் அமைப்பு ஓர் இராணுவக் கட்டமைப்பாக தொடர்ந்து இயங்கவில்லை என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட் கடந்த வாரம் செய்தியாளர்களிடம் குறிப்பிட்ட நிலையிலேயே ஹம்தானின் கருத்து வெளியாகியுள்ளது.

'போரின் அளவுடன் ஒப்பிடுகையில் உயிரிழப்பு எண்ணிக்கை என்பது எதிர்பார்த்ததை விடவும் மிகக் குறைவாகும்' என்றும் ஹம்தான் கூறினார்.

எனினும் இஸ்ரேல் நேற்றும் காசாவில் உக்கிரத் தாக்குதல்களை நடத்தியதோடு அதில் மேலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர். மத்திய காசாவின் நுஸைரத் அகதி முகாமில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்று அதிகாலை இடம்பெற்ற தாக்குதலில் பத்துப் பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

அல் கஸ்ஸாம் குடும்பத்திற்குச் சொந்தமான வீடு ஒன்றை இலக்கு வைத்தே போர் விமானங்கள் குண்டு வீசி இருப்பதோடு இதில் சிறுவர்கள் மற்றும் பெண்களும் கொல்லப்பட்டதாக உள்ளூர் வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது. இதில் மேலும் 15 பேர் காயமடைந்துள்ளனர்.



அதேபோன்று காசா நகரின் செய்தூன் மற்றும் ஷெய்க் ரத்வான் பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல்களில் சிறுவர்கள் உட்பட மேலும் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தெற்கு நகரான ரபாவில் அபூ ஷார் குடும்பத்திற்குச் சொந்தமான வீடு ஒன்றின் மீது இடம்பெற்ற தாக்குதலை அடுத்து அங்கிருந்து இரு சடலங்களை மீட்டதாகவும் காயமடைந்த பலரும் மீட்கப்பட்டதாகவும் பலஸ்தீன சிவில் பாதுகாப்பு நிறுவனம் டெலிகிராம் தளத்தில் குறிப்பிட்டுள்ளது.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 20 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 76 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 41,226 ஆக அதிகரித்திருப்பதாகவும் அந்த அமைச்சு கூறியது. தவிர 95,413 பேர் காயமடைந்துள்ளனர்.



காசாவில் போர் நிறுத்த முய்சிகள் தோல்வி கண்டு வருவதோடு கடந்த 2007 ஆம் ஆண்டு தொடக்கம் அந்தப் பகுதியில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் அமைப்பை முற்றாக ஒழிப்பதற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சூளுரைத்து வருகிறார். எனினும் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு காசாவில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் முற்றாக வாபஸ் பெறுவதற்கு ஹமாஸ் அமைப்பு வலியுறுத்தி வருகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 17ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.